உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்


e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-155

பிப்ரவரி 1-15 2023


விருப்ப சந்தா
செலுத்த
ஸ்கேன்
செய்யவும்

## சிவன் சாம்பலை பூசுவதன் பொருள்




www.aanmeegamalar.com
e-magazine
e-magazine


# நாட்டை ஆள்பவர்கள் நல்லவர்களா?

## தசராஜ தம்ம கடமைகள் கூறும் உண்மை

# பன்னிரு திருமுறைகள்




பன்னிரு திருமுறைகள் என்று கூறப்படும் சைவத் திருமுறைகள், பல நாயன்மார்களால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும்.

முதல் திருமுறை (சம்பந்தர் அருளியது)
இரண்டாம் திருமுறை (சம்பந்தர் அருளியது)
மூன்றாம் திருமுறை (சம்பந்தர் அருளியது)
நான்காம் திருமுறை (அப்பர் அருளியது)
ஐந்தாம் திருமுறை (அப்பர் அருளியது)
ஆறாம் திருமுறை (அப்பர் அருளியது)
ஏழாம் திருமுறை (சுந்தரர் அருளியது)
எட்டாம் திருமுறை
(திருவாசகம், மாணிக்கவாசகர் அருளியது)
ஒன்பதாம் திருமுறை
(ஒன்பதின்மர் அருளியது)
பத்தாம் திருமுறை
(திருமூலர் அருளிய திருமந்திரம்)
பதினொன்றாம் திருமுறை
(சிவனடியார் இருபத்தேழ்வர் அருளியது)
பன்னிரண்டாம் திருமுறை
(சேக்கிழார் அருளிய பெரியபுராணம்)

# சங்கடங்கள் தீர்க்கும் நடராஜ மந்திரம்

பரதக் கலையில் சிறந்து விளங்கும் ஸ்ரீ நடராஜ பெருமானின் ஆசியையும் பெற, கீழுள்ள சிறப்பு மந்திரத்தை உச்சரித்து வழிபட வேண்டும். இவ்வாறு வழிபடுவதன் மூலம் மன அழுத்தம் குறைந்து நிம்மதியாக வாழலாம்.

**ஸஹஸ்ராதித்ய ஸங்காசம் ஸஹஸ்ர
வதநாம் பரம்
ஸஹஸ்ர தோஸிஸஹஸ்ராரம்ப்ரபத்யே
(அ) ஹம்ஸூதர்சநம்
ஹூம் கார பைரவம் பீமம் ப்ரபந்நார்த்தி
ஹரம் ப்ரபும்
ஸர்வ பாப ப்ரசமநம்
ப்ரபத்யேஹம் ஸூதர்சநம்.**

ஒவ்வொரு சனிக்கிழமை அன்றும் சிவன் ஆலயத்திற்கு சென்று, நடராஜப்பெருமானுக்கு பசும்பால் அபிஷேகம் செய்து, நெய்யால் விளக்கேற்றி இம்மந்திரத்தை உச்சரித்து பூஜை செய்து வந்தால், நம் வாழ்க்கையில் உள்ள சங்கடங்கள் நீங்கும். குறிப்பாக ஆருத்ரா தரிசனம் அன்று இம்மந்திரத்தை கூறி பூஜை செய்தால், சகல சௌபாக்கியங்களையும் பெற்று மகிழ்ச்சியாக வாழலாம்.



# சம்மணமிட்டு உட்கார்ந்தால் நோய் நொடி நீங்கும்...

## முன்னோர் கூறிய சாப்பிடும் முறையும் நேரமும்

சாப்பிடும் போது நாம் தற்போது பல்வேறு வகைகளை பின்பற்றுகிறோம், நாற்காலியில் அமர்ந்து கொண்டு சாப்பிடுவது, நின்றுகொண்டு சாப்பிடுவது, பேசிக் கொண்டே சாப்பிடுவதுஇன்னும் பல்வேறு செயல்களை சாப்பிடும் போது செய்து கொண்டிருப்பது இக்காலத்தில் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஆனால் நம் முன்னோர்கள் சாப்பிடுவதற்கும் பல்வேறு வழிமுறைகளை கடைபிடித்துள்ளனர், அதில் மிக முக்கியமாக தரையில் சம்மணமிட்டு உட்கார்ந்து சாப்பிடுவதை கடைபிடித்தனர். இந்த முறை சாப்பிட உகந்த முறையாக உலகெங்கிலும் பலரால் இன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நாம் பொதுவாக எப்பொழுதும் காலை தொங்க வைத்து அதிகமாக அமர்ந்திருக்கிறோம்...

இரண்டு சக்கர வாகனத்தில் பயணிக்கும் பொழுது, பேரூந்தில், இரயில் வண்டிகளில், சினிமா தியேட்டரில், பள்ளிகளில், அலுவலகங்களில், வீடுகளில், சோபாக்களில், கட்டில், நாற்காலி இப்படி நன்றாக யோசித்துப் பார்த்தால் நாம் அதிகநேரமாக காலைத் தொங்க வைத்துக் கொண்டே இருக்கிறோம்.



இப்படிக் காலைத் தொங்கவைத்துஅமர்வதால் நமக்குப் பல உடல் உபாதைகள் உருவாகிறது.

இதற்குக் காரணம் என்னவென்றால் காலைத் தொங்கவைத்து அமரும்பொழுது, நமது உடலில் இரத்த ஓட்டம் இடுப்பிற்குக் கீழ்ப் பகுதியில்மட்டுமே அதிகமாக செல்கிறது...

நாம் காலை மடக்கி சம்மணம் போட்டுஅமரும் போது இடுப்புக்கு மேலே இரத்த ஓட்டம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது. நமது உடலில் இடுப்புக்கு கீழே உள்ள கால்களுக்கு நடக்கும்பொழுது மட்டும் இரத்த ஓட்டம் சென்றால் போதும்.

மிக முக்கியமான உறுப்புகளாகிய சிறுநீரகம், கணையம், நுரையீரல், மூளை, கண், காது ஆகியவை இடுப்புக்கு மேல்ப்பகுதியில் தான் இருக்கிறது. எனவே ஒருவர் காலைதொங்கப் போடாமல் சம்மணங்கால் போட்டு அமர்ந்திருந்தால் அவருக்கு சக்தியும், ஆரோக்கியமும் அதிகமாக கிடைக்கிறது.

எனவே, சாப்பிடும் பொழுதாவது கீழே உட்கார்ந்து காலை மடக்கி அமர்ந்துதான் சாப்பிட வேண்டும்.

ஏனென்றால், இடுப்புக்கு கீழே இரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப் பகுதிக்குச் செல்லும்பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது. சாப்பிடும்பொழுது காலைத் தொங்க வைத்து நாற்காலியில் அமர்வதனால் இரத்த ஓட்டம் வயிற்றுப் பகுதிக்குச் செல்லாமல் காலுக்கே அதிகமாக செல்கிறது.

இந்திய வகை கழிவறை செல்லும்போது மட்டும்தான் காலை மடக்கி அமர்கிறோம் யுரோப் பியன் கழிவறையில் அமரும் பொழுது குடலுக்கு அதிக அளவு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே கழிவு வெளியேறும்,

அதனால் தான் இப்பொழுது சிறுகுழந்தைகள் கூட யுரோப்பியன் வகையினை

பயன்படுத்துவதால் அவர்களால் தரையில் சுக ஆசனத்தில் அமர் வதற்கு முடியாமல் தவிக்கிறார்கள். ஒரு விஷயத் தைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களால் சம்ம ணங்கால் போட்டுக்கூட தரையில் உட்கார முடிய வில்லை என்றால் இந்த உடம்பை எந்த அளவிற்கு கெடுத்து வைத்திருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்....

எனவே முடிந்த வரை காலை தொங்கவைத்து அமர்வதை தவிருங்கள்...

எனவே யுரோப்பியன் வகை கழிவறைகளை தவிருங்கள்...

கட்டிலிலோ, ஷோபாவிலோ அமரும்பொழுது சம்மணம் இட்டே அமருங்கள்...

சாப்பிடும் பொழுது தரையில் ஏதாவது ஒரு விரிப்பை விரித்து அதன்மேல் சம்மணங்கால் போட்டு அமர்ந்து சாப்பிட்டால் சாப்பாடு நன்றாக ஜீரணிக்கும்...

சில வீடுகளில் அதற்கு வாய்ப்பில்லை என்று இருந்தால் டைனிங் டேபிளில் அமர்ந்து காலை மடக்கி வைத்து அமர்ந்து சாப்பிட்டுக் கொள்ளுங்கள்...

## சாப்பிடும் முறை...!

1. நின்று கொண்டு சாப்பிடும் பழக்கத்தை மாற்றி. குடும்பத்துடன் அமர்ந்து ஒன்றாய் சாப்பிடுங்க...
2. எந்த வகை சாப்பாடாக இருந்தாலும் நன்றாக மென்று, கூழாக்கி சாப்பிடுங்கள்...
3. பேசிக் கொண்டு, தொலைக்காட்சி, புத்தகம் பார்த்து கொண்டே சாப்பிட கூடாது...
4. சாப்பிடும் பொழுது இடையில் தேவையில்லாமல் தண்ணீர் குடிக்காதிங்க. கடைசியில் தண்ணீர் குடிக்க மறக்காதீங்க. போதிய அளவில் தண்ணீர் பருகுங்கள்...
5. அவசர அவசரமாக சாப்பிட வேண்டாம்...
6. பிடிக்காத உணவுகளை கஷ்டபட்டு சாப்பிட வேண்டாம்...
7. பிடித்த உணவுகளை அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட வேண்டாம்...
8. ஆரோக்கிய உணவுகளை அதிகம் சாப்பிட பழகவும்...
9. இரவு உணவில், முள்ளங்கி மற்றும் கீரை உணவுகளை சேர்க்க வேண்டாம்...
10. சாப்பாட்டுக்கு அரை மணிநேரம் முன்பு பழங்கள் சாப்பிடுங்கள்... பின்பு பழங்கள் சாப்பிட வேண்டாம்...
11. சாப்பிடும் முன்பு சிறிது நடந்துவிட்டு பின்பு சாப்பிடவும். இரவு சாப்பிட்ட பின், நடப்பது நலம்...
12. சாப்பிட வேண்டிய நேரம்...

| | |
|---|---|
| காலை | 7to9 மணிக்குள் |
| மதியம் | 1to3 மணிக்குள் |
| இரவு | 7to9 மணிக்குள் |

13. சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து தான் தூங்கம வேண்டும்...
14. சாப்பிடும் முன்பும் பின்பும் கடவுளுக்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள்...



aanmeegamalar.com

# குளிக்கும் முறையில் தீர்க்கப்படும் கிரகதோஷம்



aanmeegamalar.com

ஒவ்வொருவருடைய ஜாதகத்திலும் ஒவ்வொரு விதமான தோஷங்கள் ஏற்படுவது இயல்பு, இந்த வகையில், ஜோதிட சாஸ்திரத்தின்படி, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என நவகிரகங்கள் மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

சூரியனைத் தவிர பிற கிரகங்கள் தாமும் சுழன்று கொண்டே சூரியனையும் சுற்றிவருகின்றன. ராகு மற்றும் கேது கிரகங்கள் இடம் சுழியாகவும், பிற மற்றைய கிரகங்கள் வலம் சுழியாகவும் சுற்றுகின்றன.

கிரகங்கள் அனைத்துமே வெவ்வேறு வேகத்தில் சுற்றுவதால், கிரக நிலைகள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது. இதனால் ஒவ்வொரு வகையில் கிரகங்களால் தோஷங்கள் ஏற்படுகிறது.

இதுபோன்ற கிரக தோஷங்களை சிறு சிறு செயல்கள் மூலம் நிவர்த்தி செய்து கொண்டே வரவேண்டும். நமது ஆன்மிகமலர்.காம் வாசகர்களுக்காக பல நூல்களில் கிடைத்த தகவல்களை தொகுத்து வழங்கியுள்ளோம்.

அந்தவகையில் கிரக தோஷங்களை குளிக்கும்போது ஒருசில செயல்கள் மூலமும் தீர்த்து கொள்ளலாம். அதைப் பார்ப்போம்...

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் அவர் அவர் ராசிப்படி கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை பயன்படுத்தி ஸ்நானம் செய்து கிரக தோஷத்திலிருந்து விடுபடலாம்.

| | |
|---|---|
| மேஷம் | சூரிய உதயத்திற்கு முன் செம்பருத்திப் பூக்களை தண்ணீரில் சேர்த்துக் குளிக்கவும். |
| ரிஷபம் | எள்ளை தண்ணீரில் போட்டு குளிக்கவும். |
| மிதுனம் | தண்ணீரில் சிறிது கரும்புச்சாறு கலந்து குளிப்பது நல்லது. |
| கடகம் | பஞ்சகவ்யம் தண்ணீரில் கலந்து குளிக்க வேண்டும். |
| சிம்மம் | கங்கை நீர் மற்றும் குங்குமம் கலந்து குளிக்கவும், |
| கன்னி | ஏலக்காய் தண்ணீர் கலந்து குளிக்கவும். |
| துலாம் | ரோஜா இதழ்களை தண்ணீரில் சேர்த்துக் குளிக்கவும். |
| விருச்சிகம் | சிவப்பு சந்தனத்தை தண்ணீரில் கலந்து சூரிய உதயத்திற்கு முன் குளிக்கவும். |
| தனுசு | தண்ணீரில் மஞ்சள், மற்றும் கடுகு கலந்து குளிக்கவும். |
| மகரம் | கருப்பு எள்ளுடன் குளிக்கவும். |
| கும்பம் | கறுப்பு எள்ளுடன் தண்ணீரில் குளிக்கவும் |
| மீனம் | தண்ணீரில் மஞ்சள் கலந்து குளிக்கவும். |



# மனித மரணமும் சித்தர்கள் ஜீவ சமாதியும்

பார்ப்பவன், பார்க்கப்படும் பொருள், பார்த்தல் என்ற செயல் மூன்றும் சேர்ந்த நிலை தான் சமாதி நிலை. சாதாரண மனிதனின் மரணத்துக்கும், இந்த சித்தர்களின் சமாதி நிலைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது. சாதாரண மனித மரணத்தில் உடலின் கழிவுகளான மலம், சிறுநீர், விந்து நாதம் போன்றவை வெளிப்பட்டு மரணம் சம்பவிக்கும். ஆனால், சித்தர்களின் சமாதி நிலையில் இவ்வகை கழிவுகள் வெளிவராமல் உயிர் சக்தியாகிய விந்துவானது உச்சந்தலையில் அடங்கி ஒடுங்கி விடும்.

### சித்தர்களின் சமாதி நிலை

யோகிகளுடைய உடல் இயக்கமும், மன இயக்கமும் நிறுத்தப்பட்டு விடும். அந்த உடல் மற்ற, உடல்களை போல மண்ணில் அழியாது. காலா, காலத்துக்கும் காக்கப்படும். இந்த சமாதி நிலைகள் பலவகைப்படும். அவை காய கல்ப சமாதி நிலை, ஒளி சமாதி நிலை, நிர்விகற்ப சமாதி நிலை, விகற்ப சமாதி நிலை, சஞ்சீவனி சமாதி நிலை என மேலும் பல உண்டு. இது பெரிய சமுத்திரத்தை சிறு பாத்திரத்தில் அடைப்பது போல சொல்லிகொண்டே போகலாம். மேற்கண்ட இந்த சில சமாதி நிலைகளை, எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் சற்று விரிவாக பார்ப்போம்.

### காய கல்ப சமாதி நிலை

உயிர் துறத்தலுக்கு பிறகு உடலை மட்டும் பாது காப்பாக வைத்துக் கொள்ள உதவும் சமாதி நிலை இது. இந்த சமாதி நிலையில் மறு பிறப்புக்கு வழி உண்டு என நம்பப்படுகிறது. ஜீவசமாதி அடைந்த யோகி நினைத்தால் மீண்டும் அந்த உடலுக்குள் வரமுடியும். இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக கொடிவிலார் பட்டி, தேனீ மாவட்டத்தில் உள்ள சச்சிதானந்தர் சுவாமிகளின் சமாதியை கூறலாம்.

### ஒளி சமாதி நிலை

ஒரு யோகி, உடலை ஒளி தேகமாக்கி, உடலின் சூட்டினை அதிகரித்து இந்தப் உடலை பூமிக்குக் கொடுக்காமல் ஒளியாக்கி மறைந்து விடுதலே, ஒளி சமாதி ஆகும். இதற்கு உதாரணமாக,வடலூர் வள்ளலார், திருவண்ணாமலையில் இருந்த விட் டோபா ஸ்வாமிகள், எடப் பள்ளி சத் குருனாதர், விருத்தாசலம் குமாரதேவர் ஆகியோரை கூறலாம்.

### நிர்விகற்ப சமாதி

பிரம்மத்தில் லயம் பெற்று, மறுபிறவி அற்ற நிலையை அடைவது. இதற்கு உதாரணம் மகா முனிவர் போகர்.

### விகற்ப சமாதி

மனதில் இருமை நிலையோடு கூடிய சமாதி நிலை. இதில் மறுபிறப்புக்கு வழி உண்டு.

### சஞ்சீவனி சமாதி

உடலுக்கு சஞ்சீவித் தன்மையை மண்ணிலும், மனதின் சஞ்ஜீவித் தன்மையை விண்ணிலும் கொடுக்கும் நிலை. இது ஒரு மறுபிறப்பு இல்லாத நிலை. இதற்கு உதாரணமாக சந்த ஞானேஸ்வர் சமாதி யை கூறலாம், இது ஆலந்தியில் உள்ளது.

இன்னும் எண்ணற்ற சமாதி நிலைகள் உள்ளது. அவற்றை பற்றி எழுத இந்த ஒரு கட்டுரை போதாது.

# சிவன் சாம்பலை பூசுவதன் பொருள்

சிவன் என்றால், தமிழில் "சிவந்தவன்" என்று பொருள். வடமொழியில் சிவம் என்ற சொல்லுக்கு முழுமையானது, மங்களகரமானது என்று பல பொருள் உண்டு. முது முதல்வன், ஈர்ஞ்சடை அந்தணன், காரியுண்டிக் கடவுள், ஆலமார் கடவுள் என அனேகம் சிவப்பெயர்கள் சங்கநூல்களில் உள்ளன.

எக்கணமும் யோகநிலையில் ஆழ்ந்திருப்பதால் யோகி என்றும், அட்டமா சித்திகளில் வல்லவர் என்பதல் சித்தன் என்றும், சுடுகாட்டில் மனம் பேதலித்துப் பேய்களுடன் ஆடுபவராகச் சித்தரிக் கப்படுவதால், பித்தன் எனவும் குணங்களின் அடிப்படையில் அழைக்கப்படுகிறார்.

உலக வாழ்க்கையிலிருந்து மாறுபட்டு யோக நிலையில் உள்ள சிவபெருமான் உடல் முழுவதும் சாம்பல் என்ற விபூதியை பூசிக் கொண்டும், விபூதிப் பிரியராகவும் இருப்பதாகவும் புராணங் களில் கூறப்படுகிறது.

இவர் சாம்பலை உடல் முழுவதுமாய் பூசிக் கொள்வதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி, புராண கதையொன்றில் கூறப்பட்டுள்ளது.

அதில், ஆதிசக்தியின் அவதாரமான மற்றும் தன் முதல் மனைவியுமான சதி, தன்னை தானே தீக்கிரையாக்கிக் கொண்ட போது, சிவபெருமானால் தன் ஆத்திரம், வலி மற்றும் வேத னையைக் கட்டுப்படுத்தமுடிய வில்லை. அதனால் அவரின் பிணத்தை எடுத்துக் கொண்டு தடுமாற்றத்துடன் ஓடினார்.

அப்போது விஷ்ணுபகவான் சதியின் பிணத்தை தொட்டவுடன்அவர் சாம்ப லாகி போனார். தன் மனைவியின் இழப்பை தாங்கிக்கொள்ள முடி யாத சிவபெருமான், அவர் எப்போதும் தன்னுடனே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன் உடல் முழுவதும் தன் மனைவியின் சாம்பலை பூசிக்கொண்டார். இதனால் தான் சிவன் சாம்பல் நிறத்துடையான் என்று போற்றப்படுகின்றார்.

தன் இடுப்பைச் சுற்றி இடது தோள்பட்டை வரை புலித்தோல் ஆடை, கழுத்தை சுற்றி பாம்பு, ஜடாமுனியில் அரை நிலவு, திரிசூலம் மற்றும் உடல் முழுவதும் சாம்பல் பூசப்பட்ட நிலையில் சிவன் காட்சி தருவதாக கூறப்படுகிறது.

மனிதர்களின் பிறப்பு மற்றும் வாழ்விற்குபொறுப் பான பிரம்மா மற்றும் விஷ்ணுவை போல் அல் லாமல், அவர்களை அழிக்கும் கடவுளாகஉள்ளார் சிவன். அவர் உடலில் உள்ள ஒவ் வொரு கூறுகளும் விடாமுயற்சி, அமைதி, பயம், நேரம் மற்றும் காமம் ஆகியவற்றை வெல்வதைக்குறிக்கும்.

இதேபோன்று இவர் உடல் முழுவதும் பூசிக் கொண்டுள்ள சாம்பல் இறந்தவர்களுடன் ஆத்ம ரீதியான தொடர்பைக் கொண்டுள்ளது.



இறந்த பிறகு எஞ்சியிருப்பது சாம்பல் மட்டுமே, சிவபெருமான் உடல் முழுவதும் சாம்பலை பூசிக்கொள்வதனால், இறந்தவர்களின் தூய்மையை பறைசாற்றுவதாக கூறப்படுகிறது. உணர்ச்சிகள், காமம், பேராசை மற்றும் பயம் போன்ற பூலோக தொடர்புகளுக்கு அப்பாற்பட்டது சாம்பல் என்ற விபூதி. மேற்கண்டவற்றின் மீது அதீத ஆசைவைத்துள்ளவர்கள், இந்த விபூதியை பூசி வந்தால், உலகில் மிஞ் சப்போவது ஒன்றுமில்லை, கடைசியில் இதுபோன்ற சாம்பலாகத்தான் மாறும் என்ற உண்மைத் தன்மை புரிந்துவிடும்.

இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சிவபெருமான் தன் உடல்முழுவதும் சாம்பலை தரித்து காட்சியளிக்கிறார்.

தினமும் கோவிலுக்கு செல்லும்போது, ஒவ்வொரு நாளுக்கேற்ப பலன் கிடைக்கும், அந்த வகையில் எத்தனை நாட்கள் கோவிலுக்கு சென் றால் என்ன என்ன பலன் கிடைக்கும் என்பதை பார்ப்போம்.

| | |
|---|---|
| 3 | நாட்கள் தொடர்ந்து கோயிலுக்கு சென்றால் பிரம்மா விஷ்ணு சிவன் முதலான மூன்று தெய்வங்களின் அருள் கிட்டும் |
| 5 | நாட்கள் சென்றால் அனைத்து வியாதிகளும் நீங்கும் |
| 7 | நாட்கள் தொடர்ந்து சென்றால் திருமணம் ஆகதவர்களுக்கு வரன் கை கூடும் |
| 11 | நாட்கள் சென்றால் உடலும் மனமும் தூய்மை பெறும் |
| 13 | நாட்கள் தொடர்ந்து சென்றால் நினைத்த காரியம் கைகூடும் |
| 21 | நாட்கள் தொடர்ந்து சென்றால் புத்திர பேறு நிச்சயமாக கிட்டும் |
| 33 | நாட்கள் தொடர்ந்து சென்றால் சிவாலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்த பலன் கிட்டும் |
| 77 | நாட்கள் தொடர்ந்து கோயிலுக்கு சென்றால் ஒரு சத்ர யாகம் செய்த பலன் கிட்டும் |
| 108 | நாட்கள் தொடர்ந்து கோயிலுக்கு சென்றால் ஒரு தேவேந்திர பூஜை செய்த பலன் கிட்டும் |
| 1008 | நாட்கள் தினமும் கோயிலுக்கு சென்றால் அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும் |

வாழ் நாள் முழுவதும் தினமும் கோயிலுக்கு செல்பவனுக்கு கிடைக்காத வஸ்து என்று இவ்வுலகில் எதுவும் இல்லை!! அனைத்து விதமான சுக போகங்கள் அனுபவித்து முக்தி பேரனாந்ததை அடைவது உறுதி!!

# நாள்தோறும் கோவிலுக்கு செல்வதால் கிடைக்கும் பலன்கள்



# முன்னோர் வகுத்த வாழ்க்கை கணக்கு

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஒவ்வொரு கணக்கு பிரதானமாக இருக்கும், இதில் ‘‘நன்மை தீமைகளுக்கு கூட சித்திரகுப்தன் துல்லியமாக கணக்கு எழுதி வைத்திருப்பான்’’ என்று நம் முன்னோர்கள் சொல்லி கேள்விப்பட்டிருப்போம்.

அந்த வகையில் நன்மை தீமை மட்டுமல்லாமல் நமது சந்ததியினரின் வாழ்க்கை முறை நன்றாக அமைய வேண்டும் என்ற நோக்கில் வாழ்வியல் கணக்கையும் நமது முன்னோர்கள் அற்புதமாக தயாரித்து வைத்துள்ளனர் என்பது வியப்பிலும் வியப்பாகவே அமைகிறது.

அந்த வகையில் வாழ்க்கைக்கு தேவையான, முன்னோர் வகுத்துள்ள எளிமையான ஒரு கணக்கை பார்ப்போம்.

**உண்ணும் உணவு தானியங்களில் நவ தானியங்கள் என்று ஒன்பது தானியங்களை நிர் மாணித்தான் தானியங்களுக்கு அதிபதியாக நவக்கிரகங்கள் என்று ஒன்பது கிரகங்களையும் அமைத்தான்**

நெல் ........................................ சந்திரன்
கோதுமை ................................... சூரியன்
துவரை ...................................... செவ்வாய்
பாசிப்பயறு ................................. புதன்
கொண்டைக்கடலை ..................... குரு
மொச்சை .................................. சுக்கிரன்
எள் ........................................... சனி
உளுந்து .................................... ராகு
கொள்ளு ................................... கேது

❖❖❖❖❖❖

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

**நவதானியங்கள் ஒன்பது என நிர்மாணித்த முன்னோர்கள் திசைகளை எட்டாக பிரித்தனர்.**

கிழக்கு ................................ மேற்கு
வடக்கு ................................ தெற்கு
வட கிழக்கு........................... வட மேற்கு
தென் கிழக்கு ........................ தென் மேற்கு

❖❖❖❖❖❖



**திசையை எட்டாகப் பிரித்தவர்கள்**
**இசையை ஏழாக கொடுத்தான்...**

1. ............................................ச
2. ............................................ரி
3. ............................................க
4. ............................................ம
5. ............................................ப
6. ............................................த
7. ............................................நி

❖❖❖❖❖❖

**இசையை ஏழாக கொடுத்தவர்கள்**
**சுவையை ஆறாக பிரித்தான்...**

இனிப்பு.....................................கசப்பு
கார்ப்பு .....................................புளிப்பு
உவர்ப்பு ...................................துவர்ப்பு

❖❖❖❖❖❖

**சுவையை ஆறாக பிரித்தவன்**
**நிலத்தை ஐந்தாக பிரித்தான்...**

குறிஞ்சி............................(மலைப்பகுதி)
முல்லை ............................(வனப்பகுதி)
நெய்தல்.............................(கடல் பகுதி)
மருதம்..............................(நீர் மற்றும் நிலம்)
பாலை...............................(வறண்ட பகுதி)

❖❖❖❖❖❖

**நிலத்தை ஐந்தாக பிரித்தவர்கள்**
**காற்றை நான்காக பிரித்தார்கள்...**

தென்றல்.....................................வாடை
கோடை .....................................கொண்டல்

| |
|---|
| கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் |
| தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் |
| மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை |
| வடக்கிலிருந்து வீசும் காற்று வாடை |

❖❖❖❖❖❖

**காற்றை நான்காக பிரித்த முன்னோர்**
**மொழியை மூன்றாக பிரித்தனர்...**

இயல்.............................(இயற்தமிழ் )
இசை.............................(இசைத்தமிழ்)
நாடகம்.........................(நாடகத்தமிழ்)

இம்மூன்றும் தமிழுக்கு இணையான கூறுகள் என்பதை முத்தமிழ் என்ற கருத்து கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது...

இம்மூன்று மொழிகளுக்கும் தமிழர்கள் கொடுத்த முக்கியத்துவத்தையும் முத்தமிழ் கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது...

❖❖❖❖❖❖

**மொழியை மூன்றாக பிரித்தவர்கள்**
**வாழ்க்கையை இரண்டாக வகுத்தான்...**

அகம்.........................................புறம்

| |
|---|
| கணவன் மனைவி வாழும் வாழ்க்கை அக வாழ்க்கை... |
| வெளியில் இருக்கும் வியாபாரம் மற்றும் சுய ஒழுக்கம் எல்லாம் புற வாழ்க்கை... |

**வாழ்க்கையை இரண்டாக வகுத்த நமது முன்னோர்கள்தான்...**
**ஒழுக்கத்தை மட்டும் ஒன்றாக வைத்துள்ளனர்..**

ஒழுக்கத்தை ஒன்றாக வைத்தான் அதை, உயிரினும் மேலாக வைத்தான், இதைத்தான் அய்யன் வள்ளுவர் இரண்டு அடியில் அழகாகச் சொன்னார்...

**"ஒழுக்கம் விழுப்பந் தரலான்**
**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**



aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த
150 க்கும் மேற்பட்ட
இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# தூங்கும் திசையும் பலன்களும்

## தூக்கத்தைப் பற்றி சித்தர்களின் கருத்தும்

தூங்குவதைப் பற்றியும் அதில் உள்ள அறிவியல் உண்மைகளையும் சித்தர் பெருமக்கள் தங்கள் நூல்களில் வடித்துள்ளனர்.

தூங்குவதற்கு ஏற்ற காலம் இரவு மட்டும் தான் என்பது இயற்கையின் விதிகளில் ஒன்று. பூமியின் தட்ப வெட்ப நிலைகள் மாறி இரவில் குளிர்ச்சி பொருந்திய சூழ்நிலை தான் தூங்குவதற்கு ஏற்ற காலமாகும்

இரவில் அதிக நேரம் விழித்திருப்பதால் என்ன தீமைகள் விளையும் என்பது பற்றி சித்தர்பாடல் ஒன்று.

**சித்த மயக்கஞ் செறியும்**
**புலத்தயக்க மெத்தனுக்**
**கமைந்த மென்பவை**
**களித்தமுற வண்டுஞ் சிலரை**
**நாயாய்ப் பன்னோய் கவ்வுமிராக்**
**கண்டுஞ் சிலரை**
**நம்பிக் காண்**

இதன் விளக்கம்:

இரவில் நித்திரை செய்யாதவர்கள் தன்உடலில் புத்தி மயக்கம், தெளிவின்மை, ஐம்புலன்களில் [உடலில்] சோர்வு, பயம், படபடப்பு, அக்னி மந்தம், செரியாமை, மலச்சிக்கல், போன்ற நோய்கள் எளிதில் பற்றும்.

எந்த திசையில் தலை வைத்து படுக்க வேண்டும் என்பதை சித்தர்கள் அன்றே தெளிவாகக் கூறியுள்ளனர்.

aanmeegamalar.com






உத்தமம்..............................கிழக்கு
ஓங்குயிர்............................தெற்கு
மத்திமம்.............................மேற்கு
மரணம் ..............................வடக்கு

| |
|---|
| கிழக்கு திசையில் தலை வைத்து படுப்பது மிகவும் நல்லது. |
| தெற்கு திசையில் தலை வைத்துப் படுத்தால் ஆயுள் வளரும் |
| மேற்கு திசையில் தலை வைத்துப் படுத்தால் கனவு, அதிர்ச்சி உண்டாகும். |
| வடக்கு திசையில் ஒரு போதும் தலை வைத்து தூங்கக் கூடாது |

இதனை விஞ்ஞான ரீதியாகவும் ஒப்புக்கொண் டுள்ளனர். வடக்கு திசையில் இருந்து வரும் காந்தசக்தி தலையில் மோதும் போது அங்குள்ள பிராண சக்தியை இழக்கும். இதனால் மூளை பாதிக்கப் படுவதுடன், இதயக் கோளாறுகள், நரம்புத்தளர்ச்சி உண்டாகும்.

மல்லாந்து கால்களையும், கைகளையும் அகட்டி வைத்துக் கொண்டு தூங்கக் கூடாது. இதனால் இவர்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் (பிராண வாயு) உடலுக்குக் கிடைக்காமல் குறட்டை உண்டாகும்.

குப்புறப் படுக்கக் கூடாது, தூங்கவும் கூடாது.

இடக்கை கீழாகவும், வலக்கை மேலாகவும் இருக்கும்படி கால்களை நீட்டி இடது பக்கமாக ஒருக்களித்துபடுத்து தூங்க வேண்டும்.

இதனால் வலது மூக்கில் சுவாசம் சூரியகலையில் ஓடும். இதில் எட்டு அங்குலம் மட்டுமே சுவாசம் வெளியே செல்வதால் நீண்ட ஆயுள் வளரும். மேலும் இதனால் உடலுக்குத் தேவையான வெப்பக்காற்று அதிகரித்து பித்தநீரை அதிகரிக்கச்செய்து உண்ட உணவுகள் எளிதில் சீரணமாகும்.

இதயத்திற்கு சீரான பிராணவாயு கிடைத்து இதயம் பலப்படும்

வலது பக்கம் ஒருக்களித்து படுப்பதால் இடது பக்க மூக்கின் வழியாக சந்திரகலை சுவாசம் ஓடும், இதனால் பனிரெண்டு அங்குல சுவாசம் வெளியே செல்லும். இதனால் உடலில் குளிர்ச்சி உண்டாகும்.

இரவில் உண்ட உணவு சீரணமாகாமல் புளித்துப் போய் விஷமாக நேரிடும்.

மனித வாழ்க்கையின் துவக்கம் முதல் முடிவு வரை கடைபிடிக்க வேண்டியதை தெளிவாக கூறும் ஒரே மதம் நமது இந்துமதம், தூங்குவது பற்றி மிக எளிமையாக கூறியுள்ள நமது சித்தர் களின் வழியை பின்பற்றினால் நோய் இன்றி வாழலாம்.





ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

150 இதழ்களையும்

இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...

Scan to Read-
aanmeegamalar
E-magazine

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மீக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# வாலாஜாபேட்டை ஸ்ரீதன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் தைபூச சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்றது

வாலாஜாபேட்டை , ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர். முரளிதர ஸ்வாமி களின் ஆக்ஞைப்படி தினந்தோறும் ஹோமங்கள், சிறப்பு பூஜைகள், அபிஷேகங்களும், மாதாந்திர அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, பிரதோஷ நாட்களில் பல்வேறு ஹோமங்களும், பூஜைகளும் நடைபெற்று வருகிறது.

அதன்படி தை மாத பிரதோஷத்தை முன் னிட்டு, தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், நந்தி பீடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மரகதாம்பிகை சமேத ஸ்ரீமரகதலிங்கேஸ்வரர்க்கும் சிவலிங்க வடிவில் உள்ள 468 சித்தர்களுக்கும் சிறப்பு அபிஷேகம், பூஜைகளும், சித்தர்களின் ஞான குருவான ஸ்ரீ கார்த்திகை குமரனுக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

பிரதோஷ பூஜை மற்றும் அபிஷேகங்களில் பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்து, பிரசாதங்களும், பீடாதிபதி டாக்டர். முரளிதர ஸ்வாமிகளிடம் ஆசியும் பெற்று சென்றனர்.

முன்னதாக பிப்ரவரி 3ம்தேதி வெள்ளிக்கிழமை தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், ஸ்ரீ தன்வந்திரி, ஸ்ரீ சுதர்சனர், ஸ்ரீமகாலட்சுமி ஹோமங்கள், சந்தான கோபால யாகம் மற்றும் நவநீத கிருஷ்ணருக்கு சிறப்பு பூஜைகளும் நடைபெற்றது.

மாதாந்திர பௌர்ணமி நாட்களில் ஆண், பெண், பித்ரு தோஷம், களத்திர தோஷம், நவக் கிரக தோஷம், ஜாதக ரீதியான தோஷங்கள், பித்ரு சாபம் நீங்கி விரைவில் திருமண பாக்கியம் பெற கந்தர்வ ராஜஹோமம், சுயம்வர கலா பார்வதி ஹோமங்களும், தம்பதிகள் புத் திர தோஷம் நீங்கி குழந்தை பாக்யம் பெற சந் தான கோபால யாகமும், ராகு கேதுவிற்கு அன்னாபி ஷேகமும் நடைபெற்றது.

தைப்பூசம் மற்றும் பௌர்ணமியை முன்னிட்டு கந்தர்வ ராஜ ஹோமம், சுயம்வர கலா பார்வதி ஹோமம், சந்தான கோபால யாகம், சகல தேவதா ஹோமமும், சர்வதேவதா பூஜையும், ராகு கேது விற்கு அன்னாபிஷேகமும் நடைபெற்றது.

மேலும் அன்று தைப்பூசத்தை முன்னிட்டு தன்வந்திரி பீடத்தில் அமைந்துள்ள வள்ள லாருக்கும், சிவலிங்க ரூபத்தில் உள்ள 468 சித்தர்களுக்கும் சிறப்பு அபிஷேக, பூஜைகளும், சிறப்பு அன்னதானமும் நடைபெற்றது.

முன்னதாக காலை கோ பூஜையுடன், காலச்சக்கர பூஜை, கலச பூஜை ஆகியவையும் பின்னர் லோக ஷேம ஆரத்தியுடன் ஹோமமும், பூர்ணாஹுதி மற்றும் கலசாபிஷேகமும் நடை பெற்றது.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# நமது இதழுக்கும் சேவைக்கும் பாராட்டு தெரிவித்தவர்கள்

"ஆன்மிக மலர் மெயில் புத்தகம்" வடிவமைப்பு அச்சுப்பணி நடுநிலை தவறாமை என அனைத்தும் சிறப்பு. வாசிக்கும் ஆவலை தூண்டுகிறது. ஓரிரு எழுத்துப்பிழைகளையும் தவிர்க்கலாம். மூத்த பத்திரிக்கையாளர் என்ற வகையில் தங்கள் பணிசிறக்க வாழ்த்துக்கள்.

– மொரிஷியஸ் நாட்டில் இருந்து தமிழன் இராமேஸ்வரன்.

●❖● ❖●❖●

"ஆன்மிக மலர் மெயில் புத்தகம்" தற்போது காலம் தாழ்த்தி வெளிவருவது வருத்தமாக உள்ளது. ஆனாலும் எதிர்பார்த்து காத்திருந்து படிப்பதும் சுவையாக உள்ளது. தயவு செய்து தயாரானதும் எனக்கு 9444———— இந்த எண்ணிற்கு உடனடியாக அனுப்பி வைக்கவும், 25 குரூப்பிற்கு தொடர்ந்து அனுப்பிவருகிறேன்.

– சக்தி, வந்தவாசி, கீழ்கொடுவாலூர்.

●❖● ❖●❖●

நான் தொடர்ந்து தங்கள் இணைய தளத்தை பார்வையிடுகிறேன். மற்ற இணைய தளங்களில் இ–புத்தகத்தை டவுன்லோடு செய்ய, மெம்பராகவேண்டும் அல்லது சந்தா கட்டி உறுப்பினரானால்தான் இதழ்களை படிக்க முடியும் ஆனால், ஆன்மிகமலர்.காம் இணையதளத்தில் எந்தவித சந்தாவோ, உறுப்பினரோ ஆகாமலேயே எளிதாக இதழ்களை படிக்கவும் டவுன்லோடு செய்யவும் முடிகிறது. மற்ற பத்திரிகையாளர்களும், ஆன்மிகமலர்.காம் இணையதளத்தைப் போன்று பணத்திற்கு அடிமையாகாமல், எளிமையாக புத்தகங்களை படிக்க இலவசமாக இணையத்தில் கொடுத்தால் எங்களைப் போன்ற வாசகர்கள் படிப்பதற்கு உதவியாக இருக்கும். (விளம்பரத்திலும் காசு பார்க்கிறீரார்கள், சந்தாவிலும் காசு பார்க்கிறீர்கள்) சிந்திக்கவும்

– மலர்விழி, பேரம்பாக்கம்.

●❖● ❖●❖●

ஆன்மிக மலர்.காம் சார்பில் பழனி தண்டாயுதபாணி கோவில் கும்பாபிஷேகம், தைபூச சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இதழை மதுரை ஆதின மடாதிபதி ஸ்ரீல ஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பெற்றுக்கொண்டு தெரிவித்த பாராட்டு கீழே....



"பழனி தண்டாயுதபாணி கோவில் கும்பாபிஷேகத்திற்கு செல்லவில்லை... ஆனால் ஆன்மிகமலர்.காம் வெளியிட்ட சிறப்பிதழை பார்க்கும்போது பழனி முருகனை நேரில் பார்த்தது போன்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது"...

என்று தெரிவித்து ஆசி வழங்கினார்.

ஐயா தொடர்ந்து எனக்கு 4 இதழ்கள் கிடைக்கவில்லை, லிங்க் மட்டுமே கிடைத்தது. எப்படி பெறுவது என தெரியாதபோது, எனது நண்பர் லிங்க் எப்படி ஓபன் செய்வது என தெரிவித்தார். இதுவரை உள்ள அனைத்து புத்தகங்களும் அதில் இருந்ததை கண்டு மகிழ்ச்சியடைந்தேன் நன்றி ஐயா உங்கள் சேவை தொடரவேண்டும்..

– இசக்கிராஜா, வாகைக்குளம், தூத்துக்குடி.

●❖● ❖●❖●

**இதழ்பற்றி கருத்துக்களை வாய்ஸ் மெசேஜ், டெக்ஸ் மெசேஜ் மட்டும் 9444228203 என்ற வாட்சப் எண்ணில் அனுப்பவும் பெயர் ஊர் அவசியம் தெரிவிக்கவும்.**

# வீரபத்திரர்
## அற்புதமான 100 குறிப்புகள்



- வீரபத்திரர் என்றால் வீரத்தை பத்திரமாக தருபவர் என்று பொருள்.
- தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்ட மக்களின் கலாச்சாரம், மக்களின் வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக் கொண்டு வீரபத்திரரின் வழிபாட்டு முறைகளும் பலவிதமாக உள்ளன.
- ஆதித் தமிழர்கள், தங்கள் கிராமங்களில் அறம் நிலவ வேண்டும் என்ற ஒரே தத்துவத்தின் அடிப்படையில் வீபத்திரர் கோவில்களை ஊர் மத்தியில் கட்டினார்கள்.
- தமிழ்நாட்டில் சில கோவில்களில் மட்டுமே வீரபத்திரர் மூலவராக உள்ளார். பல கோவில்களில் திருச்சுற்றுத் தெய்வமாகவும், எல்லைத் தெய்வமாகவும் இருக்கிறார். பெரும்பாலான கிராமங்களில் காவல் தெய்வம் வீரபத்திரர்தான்.
- வீரபத்திரருக்கு எல்லாரும் பூஜை செய்துவிட முடியாது. அதற்கு ஒரு தகுதி வேண்டும். அந்த தகுதிக்கு நிர்தேதோ தாரா யந்திர பூஜை என்று பெயர்.
- வீரபத்திரருக்கு நடத்தப்படும் பூஜைகளில் வாய்க்கட்டுப்பூஜை தனித்துவம் கொண்டது. மம்சாபுரம் ஆகாச கருப்பண்ணசாமி கோவிலில் ஸ்ரீ வீரபத்திரருக்கு வாய்க்காட்டுப் பூஜையே செய்யப்படுகிறது.
- திருப்பெருந்துறை வீரபத்திரர் ஆலயத்திலும் சேலம் குகை நரசிங்கபுரம் கோவிலிலும் தினமும் 6 கால பூஜைகள் நடத்தப்படுகிறது.
- மதுரை வீரபத்திரசாமி கோவிலில் உள்ள வீரபத்திரருக்கு கற்பூரம் ஏற்றி வழிபடுவதில்லை. நெய்விளக்கு தீபம் மட்டுமே ஏற்றி வழிபடுகின்றனர்.
- வீரபத்திரருக்கு மூன்று கிளை உள்ள விளக்கை ஏற்றி வழிபடுவது மிகவும் நல்லது.
- வீரபத்திரரை வழிபடும் போது பஞ்ச வாத்தியங்கள் இசைக்கப்பட்டால் அவர் மிகவும்மகிழ்ச்சி அடைவார். குறிப்பாக பஞ்ச வாத்தியங்களில் ஒன்றான உடுக்கை ஒலி ஒசை ஸ்ரீவீரபத்திரருக்கு மிகவும் பிடிக்கும்.
- நைவேத்தியங்களில் ஸ்ரீ வீரபத்திரருக்கு நெய் கலந்து நன்கு பிசைந்த சோறு தான் மிகவும் பிடிக்கும். இந்த நைவேத்தியத்தை

வெள்ளிக் கிண்ணத்தில் மட்டுமே வைத்து படைக்க வேண்டும்.

- மதுரை இம்மையிலும் நன்மை தருவார் கோவிலில் உள்ள ஸ்ரீவீரபத்திரருக்கு பானகம் நைவேத்தியம் படைத்து வழிபட்டால், நினைத்தது நடக்கும்.
- சிவகங்கை காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீஅக்னி வீரபத்திரர் கோவிலில் தினமும் நவதானியங்களை சமைத்து நைவேத்தியம் செய்கின்றனர்.
- பெரும்பாலான வீரபத்திரர் கோவில்களில் உயிர் பலி கொடுக்கப்படும் போது வீரபத்திரருடைய முகத்தை துணியிட்டு மூடி விடுவார்கள்.
- பூவந்திக்கிராமம் மந்தை கருப்பண்ணசாமி கோவிலில் உள்ள ஸ்ரீவீரபத்திரருக்கு மாதம் ஒருதடவை உயிர் பலி கொடுத்து அசைவப்படைப்புப் போட்டு பூஜை செய்கிறார்கள்.
- மம்சாவரம் ஆகாச கருப்பண்ண சுவாமி கோவிலில் வீரபத்திரரை நினைத்து தேங்காய் உடைப்பது இல்லை.
- திருக்கழுக்குன்றம் ஸ்ரீவேதபுரீசுவரர் கோவிலில் உள்ள வீரபத்திரருக்கு நொச்சி, விளா, வில்வம் ஆகிய மூன்று இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய்வது வழக்கத்தில் உள்ளது.
- சிவபெருமானின் கருணையை வியந்து போற்றும் துதிகளுக்கு சமகம் என்று பெயர். மதுரை இம்மையில் நன்மை தருவார் கோவிலில் உள்ள ஸ்ரீவீரபத்திரர் முன்பு சமகம் படிக்கும் வழக்கம் உள்ளது.
- திருவாலங்காடு வடாரண்யேசுவரர் கோவிலில் உள்ள வீரபத்திரர் முன்பு சிவனுக்குரிய 108 போற்றிகளை கூறி வழிபாடு செய்கின்றனர்.
- நாகையில் உள்ள வீரபத்திரர் கோவிலில் ஞாயிறு தோறும் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது.
- மதுரை இம்மையிலும் நன்மை தருவார் கோவிலில் உள்ள வீரப த்திரரை செவ்வாய்க் கிழமைகளில் வழிபட்டால், பங்காளிச் சண்டைகள் தீரும் என்பது ஐதீகம்.
- மதுரை அவனியாபுரத்தில் உள்ள குருநாதசுவாமி கோவிலில் இருக்கும் ஸ்ரீ வீரபத்திரருக்கு வெள்ளிக்கிழமை மட்டுமே கூடம் ஏற்றி வழிபடுகிறார்கள்.
- வீரபத்திரரை ராகு கால நேரத்தில் வழிபட்டால் கூடுதல் பலன்கள் கிடைக்கும் என்பது ஐதீகம்.
- ஞாயிற்றுக்கிழமை சூரிய ஓரை நேரத்திலும், செவ்வாய்க்கிழமை செவ்வாய் ஓரை நேரத்திலும் வீரபத்திரரை வழிபடுவது சிறப்பானதாக கருதப்படுகிறது.
- திருபுவனம் ஸ்ரீவீரபத்திரசாமி கோவிலில் பௌர்ணமி வழிபாடு மிகவும் சிறப்பாக நடத்தப்படுகிறது. வாழ்க்கையில் வெற்றிகளை குவிக்க விரும்புபவர்கள் அமாவாசை நாட்களில் வீரபத்திரரை வழிபட்டு வந்தால் உரிய பலன்கள் கிடைக்கும்.
- சென்னை திருவொற்றியூரில் உள்ள அகத்தீசுவரர் கோவிலில் உள்ள வீரபத்திரருக்கு ஒவ்வொரு அமாவாசைக்கும் வெற்றிலை பட்டை மாலை சார்த்தி வழிபாடுகள் செய்கிறார்கள்.
- பூரம், கிருத்திகை நட்சத்திர நாட்களில் வீரபத்திரரை வணங்கினால் சகல செல்வங்களும் கிடைக்கும்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

- தக்கோலம் வீரபத்திரசுவாமி கோவிலில் கிருத்திகை நட்சத்திர நாளில் மிக, மிக சிறப்பாக பூஜைகள் நடத்தப்படுகிறது.
- அக்னி நட்சத்திர நாட்களில் வீரபத்திரரை மஞ்சள்காப்பு செய்து வழிபடுவது வழக்கத்தில் உள்ளது.
- சித்திரை மாதம் வரும் செவ்வாய்க்கிழமை 13 கிழமைகளில் வீரபத்திரருக்கு விரதம் இருந்து வழிபடலாம்.
- வீரபத்திரருக்கு செய்யப்படும் பூஜைகளில் சூலாட்டுப் பூஜையான ஆட்டை வெட்டும் பூஜை மிகவும் உணர்வுப்பூர்வமாக நடைபெறும்.
- வீரபத்திரர் வேட்டைக்கு செல்லும் போது கட்டுச்சோறு கட்டி எடுத்துச் செல்வார். அவர் திரும்பி வந்ததும் மிதமுள்ள கட்டுச்சோறை சாப்பிட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது பக்தர்கள் நம்பிக்கை.
- மாடக்குளம் வீரபத்திரர் கோவிலில் புரட்டாசி மாதம் ஊர் மக்கள் திரண்டு வந்து பொங்கல் வைத்து வழிபடுவார்கள். இதை ஊர் பொங்கல் என்று அழைக்கிறார்கள்.
- நவராத்திரி நாட்களில் அம்பிகையை வழிபடும் போதும் வீரபத்திரருக்கும் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுவது பல ஆலயங்களில் நடைமுறையில் உள்ளது.
- சிவகங்கை காமாட்சியம்மன் கோவில் தெருவில் உள்ள வீரபத்திரரை குலதெய்வமாக கொண்டவர்கள், எந்த ஒரு செயல் செய்வதாக இருந்தாலும் வீரபத்திரரிடம் உத்தரவு கேட்டு விட்டே செய்வார்கள்.
- கள்ளிக்குடி வீரபத்திரருக்கு மார்கழி மாதம் வரும் ஆருத்ரா தரிசனம் தினத்தன்று களி செய்து வழிபாடு நடத்துவது வழக்கமாக உள்ளது.
- சேலம் தாரமங்கலம் ஸ்ரீகைலாசநாதர் கோவிலில் ஆருத்ரா தரிசனம் தினத்தன்று பக்தர்களில் ஒருவர் வீரபத்திரர் போல வேடம் அணிந்து வருவார். தீபாராதனைக்கு பிறகு கடவுளுக்கு அணிவிக்கப்பட்ட ஆடை, வீரபத்திரர் வேடம் போட்டவருக்கு அணிவிக்கப்படும். இது தமிழ்நாட்டில் தாரமங்கலம் கோவிலில் மட்டுமே நடைபெறுகிறது.
- வீரபத்திரர் மாசி மாதம் ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணிக்கு கிருஷ்ணபட்சம், பிரதமை திதி, பூரம் நட்சத்திரத்தில் அவதரித்தார். இதை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அந்த நேரத்தில் அகோர பூஜை நடத்துவதை மதுரை வீரபத்திரர் கோவிலில் வழக்கமாக வைத்துள்ளனர்.



- பேரையூர் ஸ்ரீவீரபத்திரர் கோவில் மாசி மாதம் அமாவாசை தினத்தன்று இரவு சிறப்புப் பூஜைகள் நடத்தப்படும். இந்த பூஜைக்கு "மாசிப்பச்சிடி" என்று பெயர்.
- முருகனுக்குத்தான காவடி எடுப்பார்கள் என்று நினைக்காதீர்கள். திருக்குளம்பூர் கருப்பண்ணசாமி கோவிலில் உள்ள வீரபத்திரருக்கு மகா சிவராத்திரி தினத்தன்று பக்தர்கள் காவடி சுமந்து வந்து வழிபாடு செய்கிறார்கள்.
- வெங்கம்பட்டியில் உள்ள வீரபத்திரர் கோவிலில் பங்குனி உத்திரம் தினத்தன்று தீ மிதி விழா நடத்தப்படுகிறது.
- திருச்சி சின்ன கம்மாளத் தெருவில் உள்ள வீரபத்திரசுவாமி கோவிலில் தெலுங்கு புத்தாண்டு தினத்தன்று சிறப்பு பூஜைகள் செய்யப்படுகிறது.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அனுபவம்

- ஒரு சிவராத்திரி தினத்தன்று தான் தட்சன் யாகத்தை வீரபத்திரர் அழித்தார். எனவே சிவராத்திரியன்று வீரபத்திரரை வணங்கினால் நல்லது என்று கருதப்படுகிறது.
- தென் மாவட்டங்களில் மகா சிவராத்திரி தினத்தன்று வீரபத்திரருக்கு பயறு அவித்து வைத்து வழிபாடு செய்வது வழக்கத்தில் உள்ளது.
- வில்வம், தாமரைப்பூ, சாதிப்பூ மற்றும் நந்தியா வட்டம் இந்த 4 வகை மலர்களும் வீரபத்திரருக்கு மிகவும் பிடித்தமானவை.
- மதுரை வடகரையில் உள்ள வீரபத்திரருக்கு சிவராத்திரி தினத்தன்று இரவு 21 இலைகள் போட்டு பொங்கல் வைத்து வழிபாடு செய்வார்கள்.
- சேவலை அறுத்து, சேவலின் ஈரல், நெஞ்சு, குடல் போன்ற பகுதிகளை தீயில் வாட்டி சுட்டு, அவற்றை வீரபத்திரருக்கு சில ஊர்களில் படையலாக வைப்பார்கள். இந்த வழிபாட்டுக்கு சூட்டையாங் கொடுத்தல் என்று பெயர்.
- பொங்கல் சமைத்து அதனுள் கோழியை அறுத்து ரத்தம் ஊற்றி பிசைந்து, அதை 3 உருண்டைகளாகப் பிடித்து நள்ளிரவு 1 மணிக்கு ஆகாயத்தை நோக்கி வீசுவார்கள். அதை வீரபத்திரர் பெற்று கொள்வதால் ரத்த பொங்கல் கீழே விழாது என்கிறார்கள். இந்த பூஜையை ஆகாய பூஜை என்று அழைக்கிறார்கள்.
- மசோபுரம் ஆகாச கருப்பண்ணசாமி கோவிலில் சிவராத்திரி தினத்தன்று நடக்கும் பூஜையில் 40 ஊர்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- [மகா சிவராத்திரி தினத்தன்று தென் மாவட்டங்களில் அம்மன் கோவில்களில் நடைபெறும் உற்சவ ஊர்வலத்தில் மூங்கில் பிரம்பால் 8 கை செய்து, வீரபத்திராக வேடம் அணிந்து ஒருவர் முன்செல்வார். இதனை வீரபத்திரப் படலம் என்பார்கள்.
- காஞ்சி பெரியவர் ஸ்ரீசந்திர சேகரேந்திர சுவாமிகள் தம்தந்தை வழி குலதெய்வமான திருவிடைமருதூர் வீரபத்திரரை தினமும் வழிபாடு செய்து வந்தார்.
- வீரபத்திரரை குலதெய்வமாக கொண்டவர்கள் தங்கள் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு 'வீ' என்ற எழுத்தில் தொடங்கும் பெயர்களையே சூட்டுகிறார்கள்.
- கள்ளிக்குடியில் உள்ள ஸ்ரீ வீரபத்திரர், திருமண இடையூறுகளை நீக்கி அருள்பவராக கருதப் படுகிறார்.
- வீரபத்திரரை குலதெய்வ மாக கொண்டவர்கள், திருமணம், நெல் அறுவடை, நெல் விதைப்பு என்று எதை செய்தாலும் வீரபத்திரரை வழிபட்டே பிறகு தொடங்குவார்கள்.
- வீரபத்திரரை நினைத்து கும்பிட்டு வழங்கப்படும் திருநீறுக்கு பேய், பிசாசு, பில்லி சூனியம் போன்ற வற்றை விரட்டும் ஆற்றல் இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.
- வீரபத்திரர் வழிபாட்டின் போது பக்தர்கள் தலை மீது தேங்காய் உடைக்கும் ஒரு வகை வழிபாடு உள்ளது. இதற்கு தமரன் என்று பெயர்.
- திருவாரூர் நேதாஜி சாலையில் உள்ள வீரபத்திரரை வழிபடும் வீர சைவ லிங்காயத்து சமுதாயத்தினர் தங்கள் உறவு முறையில் யார் இறந்தாலும், இந்த ஆலயத்துக்கு வந்து 16ம் நாள்


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து

Scan to Read- aanmeegamalar Website

அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்

காரியத்தை செய்கிறார்கள்.

- ஈரோடு கூனம்பட்டி கிராம மக்கள் வீரபத்திரரை தங்கள் வீட்டில் வைத்து வழிபட விரும்பினால் சிலையை வீட்டுக்கு எடுத்து செல்வார்கள். சாமி கும்பிட்டு முடித்ததும் மீண்டும் வீரபத்திரர் சிலையை கோவிலில் ஒப்படைத்து விடுவார்கள்.
- வீரபத்திரரை வழிபடும் போது மிக, மிக தூய்மை அவசியம். எனவே தான் பெரும்பாலானவர்கள் வீரபத்திரர் படத்தை கூட வீட்டில் வைத்து வழிபடுவது இல்லை. அந்த அளவுக்கு வீரபத்திரர் வழிபாட்டில் தூய்மை முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- வீரபத்திரருக்கு வீரப்பர், வீரன்னார், வீர், முட்டு வீரன்னர், உத்தான வீரபத்திரர், அக்னி விரபத்திரர், அகோர வீரபத்திரர், தட்சாரி, வீரேசுவரர், வீரசூடாமணி, வீரகர், கிரதத்வம்சி, தட்சயஞ்ஞன், மல்லனார், இயக்கடிவீரர், வீரேசுவரன், உறங்காவல்லன், உறங்காபுளி கருப்பன் என்று பல பெயர்கள் உள்ளன.
- திருவானைக்காவலில் உள்ள வீரபத்திரர், சுமார் 2500 வருட புராதன சிறப்பு கொண்டது.
- காஷ்மீர் மற்றும் இமாச்சல பிரதேசத்தில் உள்ளவர் கள் வீரபத்திரரை பிரதான தெய்வமாக வழிபடுகிறார்கள்.
- மகாபாரதம், ராமாயாணம் ஆகியவை இரு காவியங்களிலும் வீரபத்திரர் பற்றிய குறிப்புகள் உள்ளன. யஜுர் வேதத்திலும் வீரபத்திரர் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- வீரபத்திரர் பற்றி தெரிந்து கொள்ள சென்னையில் கடந்த 2002ம் ஆண்டு ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் வீரபத்திரர் பற்றி 26 தலைப்புகளில் விவாதிக்கப்பட்டது.
- வீரபத்திரர் மேரு மலையில் வீற்றிருப்பவர் என்றும், பூதங்களையும், இறந்தோரின் ஆவிகளையும் அடக்கியவராகவும் ஒரு புராணத்தில் கூறப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் பெரும்பாலான ஆலயங்களில் சப்தமாதர்களுடன் சேர்ந்து வீரபத்திரர் காணப்படுகிறார்.
- தஞ்சை பெரிய கோவிலில் புடைப்புச் சிற்பமாக வீரபத்திரர் வரலாறு உள்ளது.
- தமிழ்நாட்டில் 14ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தில் தான் வீரபத்திரருக்கு அதிகப்படியான கோவில்கள் கட்டப்பட்டன.
- தமிழ்நாட்டில் நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தான் வீரபத்திரர் வழிபாடு மிகவும் போற்றுதலுக்கு உரியதாக இருந்தது.
- மதுரை, கொடுங்குன்றம், குடுமியான் மலை, தஞ்சை, திருக்கோவிலும், சிதம்பரம், காஞ்சீபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், கிருஷ்ணாபுரம், தென்காசி, ஸ்ரீவைகுண்டம், நாங்குநேரி, தேவிகாபுரம், வேலூர், கோவை முடிகொண்டம், தாரமங்கலம், பேரூர், தர்மபுரி, தாடிக்கொம்பு, பனையபுரம், தீப்பற்றியலூர், திருவள்ளூர் அருகில் உள்ள திருப்பாச்சூர் ஆகிய இடங்களில் மிகப் பிரமாண்டமான வீரபத்திரர் சிலைகள் உள்ளன.
- சிவன் தன் உடலில் இருந்து வீரபத்திரரை தோற்றுவித்தார் என்று காஞ்சிபுராணம் கூறுகிறது. ஆனால் சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து வீரபத்திரர் தோன்றினார் என்று கந்தபுராணம் கூறுகிறது.
- வீரபத்திரர், தட்சனை அழிக்க போர்க்கோலம் கொண்டபோது, தும்பைப் பூவை அணிந்து சென்றார். எனவே தான் வீரபத்திரரை வழிபடுவர்கள் தும்பைப்பூ மாலை அணிவித்து வழிபடுகிறார்கள்.
- திருவெண்காட்டில் உறைந்துள்ள அகோர வீரபத்திரரை வழிபட்டால் பொறாமை குணம் மறையும்.
- வீரபத்திரர் முருகனுக்கு மூத்தவர் ஆவார். பல திருவிளையாடல்களில் முருகனுக்கு முன்னோடியாக வீரபத்திரரே திகழ்கிறார்.
- வீரபத்திரருக்கு விரதம் இருப்பவர்கள், அறுகீரை, மொச்சைப்பயறு, தட்டைப்பயறு, அகத்திக்கீரை, மீன், கருவாடு, முட்டை மற்றும் இறைச்சி வகைகளை தவிர்த்து கடுமையான கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும்.
- வீரபத்திரர், தட்சயாகத்தை நடத்திய போது, அங்காள பரமேஸ்வரி அவருக்கு உதவியாக நின்றார். இதனால் அவளுக்கு வீரமாகாளி என்ற பெயர் ஏற்பட்டது. வீரமாகாளிக்கு பர்மா, மலேசியா, சிங்கப்பூரிலும் ஏராளமான கோவில்கள் உள்ளன.
- கும்பகோணத்தில் உள்ள புகழ் பெற்ற

aanmeegamalar.com

மகாமகம் குளத்துக்கு வீரபத்திரர்தான் காவல் தெய்வமாக உள்ளார்.

- பொதுவாக வீரபத்திரர் கோவில் அருகில் ஏதாவது ஒரு பெயரில் காளி கோவில் இருக்கும்.
- மராட்டியம் மாநிலத்தில் உள்ள ஆதி இன மக்கள் வீர் எனப்படும் வீரபத்திரரை வழிபட்டதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
- வீரபத்திரம் என்ற சொல்லுக்கு அசுவமேத குதிரை, பாதுகாப்பு தருதல், யானைகளின் வரிசை, குதிரைகளின் வரிசை என்றும் அர்த்தங்கள் உள்ளது.
- வீரபத்திரர் மிகவும் உத்திரமானவர் என்பதை காட்டவே, அவர் தலையில் அக்கினி மகுடம் அமைத்திருக்கின்றனர்.
- தட்ச யாகத்தை அழித்த வீரபத்திரர் கொடூரத் தெய்வமாக கருதப்படுவதால் ஆகமக் கோவில்களில் பெரும்பாலும் அவருக்கு தனி சன்னதி ஏற்படுத்தப்படவில்லை.
- சிவனின் அம்சமாக கருதப்பட்டாலும் பெரிய கோவில்களில் வீரபத்திரருக்கு என்று தனி விழாக்கள், கொண்டாட்டங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.
- தமிழ்நாட்டில் வீரபத்திரர் சுமார் 100 கோவில்களில் மூலவராகவும், தனி சன்னதியுடனும் இருப்பதாக லலிதா சுந்தரம் என்பவர் தனது வீரபத்திரர் அருள் தலங்கள் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- ஆங்கிலேயர்களை எதிர்த்து வீரமுடன் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வீரபத்திரரை உபாசனைத் தெய்வமாக கொண்டிருந்தார். அவரது தலை குனியாத வீரத்துக்கு வீரபத்திரர் வழிபாடே காரணமாக கூறப்படுகிறது.
- திருப்பறியலூர் தலத்தில் வீரபத்திரரை மனம் உருகி வழிபட்டால் புதிய தொழில் வாய்ப்புகள், தொழில் விருத்தி, பதவி உயர்வு ஆகியவை கிடைக்கும்.
- வடநாட்டில் இருந்து வீரசைவர்கள் தென் இந்தியாவுக்கு அதிகமாக வந்த பிறகே தமிழ்நாட்டில் வீரபத்திரருக்கு கோவில்கள் கட்டப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.
- தட்சனை சம்காரம் செய்த போது உயிரிழந்த மகரிஷிகள் பேய்களாக மாறி அலைந்ததாகவும், அனுமந்தபுரத்தில் சாந்தமாக எழுந்தருளிய வீரபத்திரர் சிவபூஜை செய்து அவர்களுக்கு விபூதி கொடுத்ததாகவும் அதன் பிறகே மகரி ஷிகள் பேய் உருவில் இருந்து மீண்டதாக வரலாறு உள்ளது.
- அனுமந்தபுரம் வீரபத்திரர் காலையில் குழந்தையாகவும், மதியம் வாலிபனாகவும், மாலையில் முதியவராகவும் காட்சி அளிப்பதாக சொல்கிறார்கள்.
- ஊழிக்காலத்தில் உலகத்தை இயக்கும் பொறுப்பும், கடமையும் வீரபத்திரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- பெரும்பாலான கோவில்களில் வீரபத்திரர் வடதிசை நோக்கியே உள்ளார். வடதிசை என்பது வெற்றியையும், செல்வத்தையும் தருவதாகும். எனவே வீரபத்திரரை

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
aanmeegamalar.com





வழிபட்டால் வெற்றியும் செல்வமும் கிடைக்கும்.

- அனுமந்தபுரம் வீரபத்திரர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்றும், அவர் 8 திசைகளும் அதிர உலாவுவதாக அந்த ஊர் மக்கள் சொல்கிறார்கள்.
- வீரபத்திரருக்கு "அனைவருக்கும் தலைவன்" என்றும் ஒரு பெயர் உண்டு.
- வீரபத்திரர் தன் பக்தர்கள் கனவில் வந்து உத்தரவுகளை சொல்லி தனக்கு வேண்டியதை பெற்றுக் கொள்ளும் சக்தி படைத்தவர். பல ஊர்களில் இந்த அற்புதம் நடந்துள்ளது.
- நிலம் வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும் தொடர்ந்து ஏதேனும் தடை ஏற்பட்டால் வீரபத்திரரை உரிய முறையில் வழிபட்டால் போதும் தடைகள் விலகி ஓடிவிடும்.
- வீரபத்திரரைப் பற்றிய ஆதி முதல் அந்தம் வரையான முழுமையான தகவல்களைக் கொண்டு ஒரு கலைக் களஞ்சியத் தைத் தயாரித்து வெளியிட்டுள்ளது திருவாவடுதுறை ஆதீனம்.
- சப்தமாதர்களைச் சிவாலயங்களில் பிரதிஷ் டை செய்யும்போது இவர்களின் காவலனாக வீரபத்திரர் பெருமானை முதலில் வைப்பார்கள்.
- வீரபத்திரரால் அழிக்கப்பட்டது தட்சன் என்பது பலருக்கும் தெரியும். மேலும், வீரமார்த்தாண்டன், சத்ததந்து, வச்சிராங்கதன் முதலியோர் அவரால் அழிக்கப்பட்டவர்கள் என்பது களஞ்சியத்தில் கிடைக்கும் கூடுதல் செய்தியாகும்.
- வீரபத்திரரை முழுமையாக அறிமுகப்படுத்தும் நூல் மகா வீரபத்திரர் கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 150 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# மருமகனுக்கு தோப்புகரணம் போட்ட பெருமாள்

கடவுள் உருவாக்கிய மதம்

நாயன்மார்கள் அருளிசெய்த தேவாரதிருமறைகள் மறைந்து கிடந்த போது அவற்றை மீட்டெடுத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நம்பியாண்டார் நம்பிகளுக்கு பல வகையில் வினயாகர் புரிந்த அருளும் உதவியும் சரித்திர புகழ் வாய்ந்தவைகள் இது தவிர ஏராளமான அருள் லீலைகளை விநாயகர் அன்றும் செய்துள்ளார் இன்றும் பலரின் வாழ்க்கையில் செய்து வருகிறார். அவரது அருள் விலாசத்தை எழுதிக்கொண்டே போவது என்றால் எழுதவும் சலிக்காது படிக்கவும் சலிக்காது.

அவருடைய லீலைகள் மட்டுமல்ல அவருக்கென்று சிறப்பாக இருக்கும் வழிபாட்டு முறைகள் கூட சலிப்பு ஊட்டாத சோர்வடைய செய்யாத வழிமுறைகளாகும். மற்ற எந்த தெய்வத்திற்கும் இல்லாத சிறப்பு வழிபாடு ஒன்று விநாயகருக்கு உண்டு அதாவது தோப்புகரணம் போடுவது. யாரவது சிவனுக்கோ பெருமாளுக்கோ தோப்புகரணம் போட்டு கேள்வி பட்டிருக்கிறீர்களா? பிள்ளையாருக்கு மட்டும் தான் தோப்புகரணம் போட முடியும். போடவும் வேண்டும். இப்படி தோப்புகரணம் போடுவதற்கு மிக நளினமான புராண பின்னணி இருக்கிறது.

காக்கும் கடவுளான திருமாலின் திருவிரலில் சுற்றி சுழன்று கொண்டிருக்கும் சுதர்சன சக்கரத்தை நாம் அறிவோம். அந்த சக்கரத்தை ஒருமுறை திருமாலின் தங்கை மகனாகிய விநாயகர் தூக்கி விழுங்கி விட்டாராம் தெரு பிள்ளையாக இருந்தால் தண்டிக்கலாம் தவறை செய்தது மருமக பிள்ளையாச்சே தண்டிக்க முடியுமா? கெஞ்சி கூத்தாடி தான் வாங்க வேண்டும். இதானால் திரு மால் எத்தனையோ வேடிக்கை விளையாட்டுகளை பிள்ளையாருக்கு காண்பித்து ஒன்றும் பயன்தராமல் போகவே தோப்புகரணம் போட ஆரம்பித்து விட்டாராம்.

இடது கையால் வலது காதையும் வலது கையால் இடது காதையும் பிடித்து கொண்டு திருமால் உட்கார்ந்து எழுந்த நிலை விநாயகருக்கு வேடிக்கையாக இருந்ததாம். தனது அழகான தொப்பை வயிறு குலுங்க குலுங்க சிரித்தாராம் இதனால் விழுங்கிய சுதர்ச சக்கரம்



வெளியே வந்து விழுந்ததாம். இது தான் தோப்பு கரணத்திற்கு சொல்லப்படும் புராண பின்னணியாகும். இந்த கதையில் குழந்தையின் மகிழ்ச்சிக்காக எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் இறங்கி வந்து கூத்தாடினால் கிடைக்கும் சுகமே தனி என்ற அனுபவ விளக்கத்தை பெறுகிறோம்.

பொதுவாக தோர்ப்பி+கரணம் என்பதே தோப்பு கரணம் என்று வழக்கு மொழியில் சொல்லப்பட்டு வருகிறது கரணம் என்ற வடமொழி சொல்லுக்கு காது என்பது பொருளாகும் தோர்ப்பி என்றால் கைகளால் பிடித்து கொள்ளுதல் என்பதும் பொருளாகும் அதாவது கைகளால் காதுகளை பிடித்தல் என்பதே தோப்பு கரணம் என்ற வார்த்தையின் அர்த்தமாகும். தோப்புகரணம் போடுவதற்கு நிஜமான காரணம் ஒன்று உண்டு.

இந்து மத வழிபாடுகளில் உள்ள நடைமுறைகள் அனைத்துமே பல நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது ஆகும். மிக குறிப்பாக உடல் நலத்தையும் மன நலத்தையும் சமூக நலத்தையும் மையமாக வைத்தே இந்து மத சடங்குகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

தோப்புகரணம் போடும் போது காதுகளை இறுக பற்றிக்கொண்டு உட்கார்ந்து எழுகிறோம் இதனால் நமது நரம்புகள் சுருங்கி சோர்வடைந்து போகாமல் இரத்த ஓட்டம் நல்லபடியாக இருக்கும் அளவு சுறுசுறுப்பு அடைகிறது. இதனால் மூளையின் செயல்பாடுகளில் உள்ள கொந்தளிப்புகள் அடங்கி சாத்வீக சிந்தனைகள் ஏற்படுகிறது. இது மனிதனுக்கு மிகவும்




ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

அவசியம் என்பதற்காகவே விநாயக வழிபாட்டில் மண்டையில் குட்டி கொண்டு தோப்புகரணம் போடும் முறை நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

தோப்புகரணம் மட்டுமல்லாது பிள்ளையார் சுழி என்பதும் கணபதி வழிபாட்டில் உள்ள சிறப்பான அம்சமாகும். சிவ சுழி, விஷ்ணு சுழி, சக்தி சுழி என்று எந்த சுழிகளும் கிடையாது. விநாயகருக்கு மட்டுமே தனிப்பட்ட ரீதியில் பிள்ளையார் சுழி இருப்பது விளையாட்டுக்கு இல்லை அதனுள் அதி அற்புதமான தத்துவம் அடங்கி உள்ளது விநாயகர் என்றாலே அகரம்,உகரம்,மகரம் கலந்த பிரணவ வடிவம் என்று முன்பே அறிந்தோம் விநாயகர் மட்டுமல்ல அவர் சுழியும் பிரணவ வடிவானது தான் மேலும் பிள்ளையார் சுழியில் சகல தெய்வ வழிபாடுகளும் அடங்கி இருக்கிறது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

பிள்ளையார் சுழியில் உள்ள வட்ட வடிவம் சிவ சக்தி பீடம் என்ற ஆவுடை என்றும் நீண்டும் நிற்கும் கோடு மூல தம்பம் என்னும் சிவலிங்கம் என்றும் சொல்லபடுகிறது. இவற்றை விந்து என்றும் நாதம் என்றும் ஞானிகள் அழைக்கிறார்கள். பிள்ளயார் சுழியில் உள்ள வட்ட வடிவம் மூலாதார பீடம் என்றும் நீள வடிவம் பிரம்ம நாடி எனவும் அது மூல கணபதி நிலையம் என்றும் தத்துவ ஞானிகள் சொல்கிறார்கள். பிள்ளயார் சுழியை பற்றி அது எழுத்துகளின் வித்து எனவும் மவுன குறி என்றும், ஊமை ஒலி என்றும் பல சாஸ்திர நூல்கள் சொல்லுகின்றன.

பிள்ளையார் சுழி உள்ள முதல் சுழி சிவனையும் அதை சுற்றி மேலே எழுந்து கீழே வரும் குறியீடு விஷ்ணு எனவும் நீளும் பகுதி பிரம்மன் எனவும் சொல்லப்படுகிறது. எனவே கண்களை மூடி ஒரு நிமிடம் தியானித்து போடுகின்ற சிறிய பிள்ளயார் சுழியில் நாத வடிவான பிரணவத்தையும் வணங்கிறோம் சிவ சக்தியாகிய அம்மையப்பனையும் வணங்குகிறோம். முத்தொழில் செய்து மூவுலகையும் காக்கும் மும்மூர்த்திகளையும் வணங்குகிறோம்.எனவே விநாயகர் என்ற ஒரே மூர்த்தியில் சகல மூர்த்தியும் அடங்கி விடுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434







# சிவராத்திரியன்று இளநீரில் தீபம் எரியும் அதிசய கோவில்

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அடுத்த கோட்டையூரில் உள்ளது "நூற்றி ஒன்று சாமிமலை குகை''. இங்கு உள்ள சிவன் கோவிலில் ஆண்டுக்கு ஒரு முறை சிவரத்திரி அன்று திருவிழா நடைபெறும்.

அன்று இங்கு இளநீரில் தீபம் ஏற்றப்படும் நிகழ்வு நடைபெறுகிறது. இக்குகையில் ஓரடி உயரம் கொண்ட கல்லால் ஆன அகல் விளக்கு ஒன்று உள்ளது (படம்). இந்த அகல் விளக்கில் இளநீர் விட்டு தீபமேற்றினால் அந்த அகல் விளக்கு பிரகாசமாக எரியும் அதிசயம் நடக்கிறது. இப்படி இளநீர் விளக்கு ஏற்றி வழிபட்டால் மன அமைதி கிடைப்பதோடு தெளிவும் ஏற்படும் என்பது நம்பிக்கை.

# நாட்டை ஆள்பவர்கள் நல்லவர்களா?

## தசராஜ தம்ம கடமைகள் கூறும் உண்மை



இக்காலத்தைப் போலவே புத்தர் காலத்திலும் அநீதியாகத் தமது ராச்சியத்தை ஆண்ட அரசர்களிருந்தார்கள். மக்கள் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டனர். சூறையாடப்பட்டனர். சித்திரவதை செய்து துன்புறுத்தப்பட்டனர்.

அநீதியான வரிகள் விதிக்கப்பட்டுக் கொடிய தண்டனைக் குள்ளானார்கள். இக்கொடுமைகளைக் கண்டு புத்த பகவான் மன வேதனை அடைந்தார். அதனால் நல்லாட்சி எப்படியிருக்க வேண்டு மென்பதைப் பற்றி ஆராய்ந்தார்.

"தம்ம பத அட்டகதா" என்ற நூலிலே இச்சம்பவம் கூறப்பட்டுள்ளது. அவருடைய கருத்துக்கள் அக்காலத்துச் சமூகப் பொருளாதார அரசியியல் பின்னணியை வைத்து மதிக்கப்பட வேண்டும். ஆட்சித்தலைவனான அரசனும் மந்திரிகளும் நிர்வாக உத்தியோகத்தரும் ஊழல் நிறைந்தவராய், நீதியற்றவராயிருந்தால், நாடு முழுவதுமே ஊழல் நிறைந்து, வளர்ச்சிகுன்றி, துன்பப்படும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

நாடு மகிழ்ச்சி மிக்கதாயிருக்க வேண்டுமானால் நீதி நிலவ வேண்டும், இவ்வாறு நீதியான அரசாட்சியை எவ்வாறு நிறுவலாமென்பதை "தசராஜதம்ம" என்ற தலைப்பில் அரசனின் பத் துக் கடமைகள் என ஜாதக கதைகளில் கூறியுள்ளார்.

பழங்காலத்திலே அரசன் என்று வழங்கப்பட்ட வார்த்தையை இன்று அரசு என மாற்றிக் கொள்ள வேண்டும். அரசனுடைய பத்துக் கடமை என்பதை இன்று அரசின் தலைவர், மந்திரிகள், அரசியல் தலைவர்கள், சட்டஞ் செய்யும்

உத்தியோகத்தர், அதனை நிர்வாகஞ் செய்வோர் ஆகியோருக்குப் பொருத்தமுடையதாகக் கொள்ளவேண்டும்.

### தசராஜ தர்மங்களில் 10 கட்டளைகள்

- முதலாவது தானம், அதாவது கொடை, செல்வம், பொருள், பண்டம் என்பவற்றில் அரசன் பற்றுடையவனாயிருக்கக் கூடாது. மக்களின் நன்மைக்காக அவற்றை அவன் தானம் செய்ய வேண்டும்.
- இரண்டாவது சீலம். கொல்லாமை, #கள்ளாமை, பிறரை வஞ்சியாமை, பிறரை சூறையாடாமை, பிறர் மனை நயவாமை, #பொய்யாமை, கள்ளுண்ணாமை என்பன இச்சீலங்களாகும். இவை பஞ்ச சீலங்கள். இவற்றையாவது அரசன் மேற் கொள்ளவேண்டும்.
- மூன்றாவது, மக்கள் நன்மை குறித்துஎல்லா வற்றையும் தியாகஞ் செய்தல். இது பரிச்சாகம் எனப்படும். மக்கள் நன்மை யை உத்தேசித்து அரசன் தன் சௌகரியங் களைத் தியாகம் செய்யத் தயாராயிருக்க வேண்டும். பெயர் புகழ் என்பவற்றையும்தன் உயிரையுமே தியாகஞ் செய்ய வேண்டும்.
- நாலாவது, #நேர்மை (அஜ்ஜவ). தன் கடமையைச் செய்யும் விஷயத்தில் அவன் பயமின்றிப் பக்கஞ்சாராதுஇருக்க வேண்டும்.. நோக்கத்தில் உண்மையுடைய வனாயிருக்க வேண்டும். பொது மக்களை ஏமற்றக் கூடாது.
- ஐந்தாவது, கருணையும் மேன்மையுடைய வனாயிருக்க வேண்டும். நல்லிசைவான சுபாவமுடையனாயிருக்க வேண்டும்.
- ஆறாவது, தன்னை ஒறுக்கும் சுபாவமுடையவனாயிருக்கவேண்டும். இது தபஸ் (துப) எனக் குறிப்பிடப்படுகிறது. டாம்பீகமான வாழ்வு வாழாதுஎளிய வாழ்வு வாழ வேண்டும். தன்னடக்க முடையவனாயிருக்க வேண்டும்.
- ஏழாவது, துவேஷ மற்றவனாய் குரோத மில்லாதவனாய் (அக்கோத) #பகைமை எண்ண மற்றவனாயிருக்க வேண்டும். எவரிடத்தும் வன்மம் இல்லாதவனாயிருக்க வேண்டும்.
- எட்டாவது அஹிம்சை. அதாவது இம்சை செய்யாதவனாயிருப்பது மாத்திரமன்று யுத்தங்களைத் தவிர்த்துச் சமாதானத்தை நிலவச் செய்ய வேண்டும். கொலை, பலாத்காரம் என்பவற்றை எங்கே கண்டாலும் தவிர்க்க வேண்டும்.
- ஒன்பதாவது: பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டும் (கந்தி). சகிப்புத் தன் மை, நல்லெண்ணம் என்பவற்றைக் கொண் டவனாயிருக்க வேண்டும். இடுக்கண், கஷ்டம், அவமானம் என்பவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். கோபத்தைத் தவிர்க்க வேண்டும்.
- பத்தாவது: எதிர்ப்பில்லாதிருத்தல் (அவிரோத). மக்களுடைய விருப்பதுக்கு மாறாக நிற்கக் கூடாது. மக்கள் நன்மைக்கு உகந்த நடவடிக்கைகளை எதிர்க்கக் கூடாது. அதாவது மக்கள் விருப்பத்துக்கு இணங்க ஆட்சி நடத்த வேண்டும்.

இத்தகைய தசராஜ தர்மம் நிரம்பியவர் களால் ஆளப்படும் நாடு சுபீட்ச முடையதாயிருக்கு மென்பதில் ஐயமில்லை. ஆனால் இது ஒரு கற்பனை ராச்சியமன்று, வாய் வேதாந்தமன்று. இந்தியாவிலே அசோகச் சக்கரவர்த்தி போன்ற பேரரசர்களின் ஆட்சிக்காலத்தில் இந்த தசராஜ தர்ம முறை சிறப்பாக இருந்தது.

– ஓஷோ எழுதிய
தம்மபதம் நூலில் இருந்து......



# அதிசயம் நிறைந்த சிறுவாபுரி

## ஒருபுறம் அபயக்கரம் நீட்டி பக்தர்களை காக்கும் முருகன்

## மறுபுறம் தீண்டும் பொருளை ஈர்த்துக் கொள்ளும் பெருமாள்

அசுவமேத யாகம் செய்ய விருப்பம் கொண்ட ராமபிரான் யாகப்பசுவாக குதிரையை ஏவிவிட அது வால்மீகி முனிவரின் ஆஸ்ரமத்தின் அருகில் வந்தது. அதை அங்கு வளர்ந்து வந்த ராமனின் பிள்ளைகளான லவனும் குசனும் கட்டிப்போட்டு விட்டனர். இது அறிந்து குதிரையை மீட்டுப் போக வந்த லட்சுமணனாலும் சிறுவர்களை வெல்ல முடியவில்லை.ராமனே நேரில் வந்து சிறுவர்களிடம் போரிட நேர்ந்தது. இவ்வாறு சிறுவர்களான லவனும் குசனும் அம்பு விட்ட இடமே சிறுவாபுரி என்று வழங்கப்படுகிறது.

சிறுவாபுரியில் பல கோவில்கள் உள்ளன. சிறுவாபுரியின் நுழைவாயிலில் சப்த மாதர் கோயில், நடுநாயகமாக அகத்தீஸ்வரர் கோயில் மேற்கே பெருமாள் கோயில், பெருமாள் கோயிலுக்குப் பின்னால் விஷ்ணுதுர்கை கோயில்கள் அமைந்து உள்ளன. இந்த ஸ்தலங்களுக்கு வடக்கே வாயு மூலையில் அமைந்துள்ள பாலசுப்ரமண்ய சுவாமி ஆலயம் மிகப் பிரசித்தி பெற்ற ஸ்தலமாக விளங்குகிறது.

இந்த ஆலயத்தை சிறுவாபுரி பெயரிலேயே அழைக்கப்படுகிறது இத்தலத்தில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் மிக கம்பீரமாக காட்சி தருகிறார்.

சிறுவாபுரி முருகன் முன் வலக்கரம் அடியவருக்கு அபயம் அளிக்க பின் வலக்கரம் ஜபமாலை ஏந்தியிருக்க முன் இடக்கரம் இடுப்பிலும்பின் இடக்கரம் கமண்டலமும் தாங்கி பிரம்ம சாஸ்தா கோலத்தில் இருக்கிறார். பிரம்மனை தண்டித்து பிரம்மனின் படைப்பு தொழிலை ஏற்ற கோலம் கொண்ட இம்முருகனை வழிபட்டால் வித்தைகள் பல கற்ற பேரறிஞர் ஆகலாம் என அருணகிரி




aanmeegamalar.com

நாதர் பாடியுள்ளார்.

இதனால் இத்தலம் அருணகிரிநாதரால் போற்றி பாடல் பெற்ற ஸ்தலமாகவும் விளங்கு கிறது.

இங்குள்ள விக்கிரகங்களில் பால சுப்ரமண்யர், ஆதி மூலவர், நவகிரகம் தவிர மற்ற விக்கிரகங்கள் அனைத்தும் மரகதப் பச்சைக்கல்லால் ஆனவை. கோவிலினுள் உயரமான கொடிமரம் முன் காணப்படும் பச்சை மரகத மயிலின் காட்சி கண்கொள்ளா அழகு. இது போன்ற சிறந்த வடிவமைப்பை வேறு எங்கும் காண்பது அரிது.

படைப்பு தொழிலை ஏற்ற கோலத்தில் காட்சி அளிப்பதால் இவரை வழிபடுவதால் வாஸ்து தோஷம் நீங்கி வீடு கட்டுவதில் தடைகள் விலகும் என்பது நம்பிக்கை!

வீடு கட்ட நினைப்பவர்கள், வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள் இத்தல முருகனை வேண் டிக்கொண்டால் புதிதாக வீடு கட்டுவதுடன், பாதியில் நிற்கும் கட்டிடப் பணிகளின் தடைகள் அகன்று விரைவாக கட்டி முடிக்கவும் அருளுவதாக ஐதீகம்.

இத்தலத்திற்கு அருகில், முருகப்பெருமானின், மாமனான பெருமாளுக்கு ஒரு கோவில் உள்ளது. இக்கோவில் பல நூற்றாண்டுகள் பழமையான கோவிலாகும்.

இந்த கோவிலும் மிகச் சிறப்பு வாய்ந் தது. இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் பெருமாள் தீண்டாத் திருமேனி பெருமாளாக விளங்குகிறார்.

இங்குள்ள பெருமாள் திருமேனிக்கு அபி ஷேகங்கள் எதுவும் செய்வதில்லையாம். ஏனென்றால் இத்திருமேனியில் அபிஷேகப் பொருட்கள் எதுவாயினும் "திருமேனியுடன் ஒட்டிக்கொள்கிறது."

இதனால் இங்குள்ள அர்ச்சகர்கள் பெருமாள் திருமேனியை தொடாமல் அரிதாக அபிஷேகம் செய்கின்றனர். "பெருமாளுக்கு சாத்தப்படும் அஸ்திரமும் திருமேனியுடன் ஒட்டிக்கொள்கிறது."

இது மிகவும் அதிசயமான ஒன்றாக இருக் கிறது. தவறுதலாக அர்ச்சகர்கள் கை விரல்கள் திருமேனியில் பட்டால் திருமேனியுடன் கைவிரல் ஒட்டி கொள்கிறதாம். மிகவும் சிரமப் பட்டு விரலை திருமேனியிலிருந்து எடுக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.

சிறுவாபுரி கோவிலுக்கு வரும் பக்தர்களில் பெரும்பாலானவர்களுக்கு இப்படி ஒரு தீண்டாத் திருமேனி பெருமாள் கோவில் இருப்பதே தெரியாத நிலையில் உள்ளது.

இவ்வளவு அதிசயம் நிறைந்த பெருமாள் ஆலயம் வெளிஉலகில் பிரபலமாகாமல் பக்தர் கள் வருகை குறைவால் கேட்பாரற்று கிடைக் கிறது.



# பாட்டன் பூட்டன் விஞ்ஞானத்தை போற்றி சந்ததியினரை காப்போம்

ஒரு விவசாயி இடத்தை வாங்கும் முன், முதல் நாள் இரவு ஒரு சேவலோடு போய் தங்குவார்...

விடியற்காலையில் சேவல் வழக்கம்போல் கூவினால் மண்ணில் 'உசுரு' இருக்கு என்று அர்த்தம். கூவாவிட்டால் மண்ணில் சத்து இல்லை என்று அர்த்தம்.

சேவல் நன்றாக கூவினால் மட்டுமே அந்த இடத்தை வாங்குவர். இதிலுள்ள முக்கியமான உண்மை என்னவென்றால் சேவல் மண்ணைக் கிளறி அதனுள் உள்ள புழுக்களை தின்று மறு நாள் தெம்பாகக் கூவும்.

மண்ணை கிளறி புழு கிடைக்கவில்லை என்றால் அந்த கூவலின் ஆற்றலில் தெரிந்துவிடும். புழு அதிகம் இருக்கும் மண் விவசாயத்திற்கு ஏற்றது.

ஒரு விவசாய கிணறு வெட்ட இருக்கும் நிலப் பகுதியை நான்கு பக்கமும் அடைத்து விட்டு பால் சுரக்கும் பசுக்களை அந்த நிலத்திற்குள் மேய விடவேண்டும். பின்னர் அந்த பசுக்களை கவனித்தால் மேய்ந்த பின் குளிர்ச்சியான இடத்தில் படுத்து அசை போடுகின்றனவாம்.

அப்படி அவை படுக்கும் இடங்களை 4, 5 நாட்கள் கவனித்தால் அவை ஒரே இடத்தில் தொடர்ந்து படுக்குமாம். அந்த இடத்தில் தோண்டினால் வற்றாத நீரூற்றுக் கிடைக்குமாம்.

இதுபோன்று ஒவ்வொரு விஷயத்திலும் நமது முன்னோர் விஞ்ஞானிகளாக திகழ்ந்தனர்.

ஆனால், அறிவியல் வளர்ந்து விட்டது எங்களால் எதையும் சாதிக்க முடியும்னு சொல்லி மக்களை நோயாளியாக்கி அவன் உயிரை காப்பாற்ற அவனையே மிரட்டி காசு பறிப்பது, சின்ன சின்ன விஷயத்தைக் கூட தீர்க்க முடியாமல் மலையாய் மலைத்து, முழியாய் முழித்துக் கொண்டிருப்பதுதான் இன்றைய விஞ்ஞானமாக உள்ளது.

எப்போது இயற்கையுடன்கூடிய கடவுள் வழி பாட்டை மறக்க ஆரம்பித்தோமே அன்றையிலிருந்து மனித இனத்தின் அழிவு துவங்கியுள்ளதாகவே இன்றும் நமது முன்னோர்கள் கூறுவது கேட்க முடிகிறது.

இயற்கையை கடவுளாக வணங்கி இயற்கையோடு வாழ்ந்த மனிதர்களை படிப்பறிவில்லாதவன் என்று கூறி, ஒன்றிற்கும் உதவாத கல்வியை பயில நமது ஆயுளின் ஒரு பகுதியை இழக்கிறோம் என்பது உண்மை.

இனியாவது நமது பாட்டன், பூட்டன் ஒளித்து வைத்துள்ள பல்வேறு விஞ்ஞான செயல்களைப் பற்றி ஆராய்ந்து நமது சந்ததியினருக்கு எடுத்துரைத்து, அவர்களை இயற்கையுடன் ஒன்றிவாழ பழக்குவோம்.



# ஆன்மீக வழியில் அமைதி

59

நமது ஸ்தூல சரீரம் அநித்தியம் ஆகும். ஸ்தூல சரீரம் உலகில் நிரந்தரமாக இருப்பதில்லை. குறிப்பிட்ட வயதுக்கு பிறகு இந்த ஸ்தூல சரீரம் அழிந்து விடுகிறது. நாம் பிறந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிறோம் என்றால் அது ஆத்மாவுக்கு அல்ல என்பதை உணர வேண்டும். அநித்தியமாக இருப்பவை காலத்தால் அழிந்துவிடும். இந்த ஸ்தூல சரீரத்துக்குத்தான் நாம் பிறந்த நாள் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். நிகழ் காலம் இறந்த காலம் எதிர் காலம் என மூன்று காலங்களிலும் எந்த ஒன்று அழியாமல் மாறாமல் அப்படியே இருக்கிறதோ அது நித்தியம் ஆகும். மூன்று காலத்திலும் எந்த ஒன்று எப்போதும் அறிவு ஸ்ரூபமாக ஆனந்த ஸ்ரூபமாக அழியாமல் இருக்குமோ அது ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.

உலகில் எல்லாம் மாறிக்கொண்டே நாளடைவில் அழிந்து விடுகிறது. ஒரு பொருள் குறிப்பிட்டக் காலம் வரை இருந்து மறைந்து விட்டால் அது அநித்தியம் என்று கூறப்படுகிறது. நமது உடலில் உள்ள கண்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டக் காலம் வரை நன்றாக இருக்கிறது. நாளடைவில் நாம் கண்ணாடி அணிந்தால்தான் படிக்கவோ பார்க்கவோ முடிகிறது. காரணம் கண்கள் நாளடைவில் தனது பார்க்கும் சக்தியை இழந்து விடுகிறது. அதற்கு மாற்று ஏற்பாடாக கண்ணாடி அணிய வேண்டியுள்ளது. எனவே உலகில் காணும் பொருட்கள் அனைத்தும் அநித்தியம். இவற்றையெல்லாம் நாம் சிந்தித்து உலகில் காணும் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.



நிகழ்காலம், இறந்தகாலம் எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் அறிவு ஸ்ரூபமாக இருந்து அழிவில்லாமல் எது இருக்குமோ அது ஆத்மா. அறிவு ஸ்ரூபமாகவும் காலத்தால் வரையறுக்க முடியாதது ஆத்மா. அதுபோல் கால வரையற்றது ஆனந்தம். ஆகாசத்தைக் கடந்து இருப்பது ஆனந்த ஸ்ரூபம். எனவே எந்தப்பொருள் வரையறுக்க முடியாமல் மகிழ்ச்சியைத் தருகிறதோ இருக்கிறதோ அது ஆனந்தம் ஆகும்.

நமது ஸ்தூல சரீரம் காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. வயதாகி விட்டால் உடலில் பலவிதமான தொந்தரவுகள் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் கால் வலி என்று டாக்டரிடம் செல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். டாக்டர் பரிசோதனை செய்து விட்டு அவருக்கு வயதாகி விட்டது. அதனால் கால்வலி ஏற்படுவதற்கு அவருக்கு வாய்ப்பு இருக்கிறது என்று கூறி விடுவார். டாக்டரிடம் எனக்கு வலது கால்போல் இடது கால் அவ்வாறு வலிக்கவில்லையே இடது காலுக்கு வயதாகவில்லையா என்று ஒருவர் கேட்டு விட்டால், டாக்டர் அவரிடம் நீங்கள் வலது காலை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்று கூறி அவரை சமாதானம் செய்துவிடுவார். இதிலிருந்து நமது ஸ்தூல உடல் வயதானால் தளர்ந்து விடும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

நாம் ஆகாசம் என்று கூறுவது வெட்டவெளியாகும். அது பரந்து விரிந்து காணப்படும். அதன் எல்லையை வரையறுத்துக் கூற முடியாது. ஆத்மா என்பது இந்த பரந்து விரிந்து காணப்படும் நாம் காணும் ஆகாசத்துக்குள் அடங்குவதில்லை. ஆகாசத்தையே வரையறுத்து விஞ்ஞானிகளால் கூற முடியவில்லை. அப்படி இருக்கும்போது ஆத்மாவை எப்படி வரையறுத்துக் கூற முடியும். ஆகாசத்தையும் கடந்து இருப்பது ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆத்மாவை பற்றி

விளக்கிக் கூற முடியாது.

காலத்தைக் கடந்து காணப்படுவது சத் ஆகும். இடத்தை அல்லது ஆகாசத்தையும் கடந்துள்ளது ஆனந்தம் அறிவு ஸ்ரூபம். நாம் ஆனந்தமாக இருக்கும்போது நமது மனம் நிறைந்து இருக்கும். அங்கு வெற்றிடம் இருக்காது. அதனை பூர்ணம் என்று கூறலாம். பூரணம் என்றால் முழுமையான நிலா. ஆத்மாவிற்கு ஸ்ரூபம் இல்லாததால் நாம் அதனை பார்க்க முடியாது. ஆனால் ஆத்மாவை உணர முடியும். ஆத்மாவை உணர்வதற்கு மன உறுதியுடன் ஆன்மீக வழியில் சென்று ஆன்மீகக் குருவை நாடி தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மனிதனுக்கு பசி என்ற உணர்வு ஏற்படும்போது வயிறு காலியாக இருக்கிறது என்பதை அப்போது உணர்ந்து கொள்கிறான். மனிதனுக்கு பசி என்ற உணர்வு மட்டும் கடவுள் ஏற்படுத்தவில்லையானால் மனிதன் உணவை உண்ணத் தோன்றாமல் உடல் தளர்ந்து இறுதியில் இறந்து விடுவான். எனவே பசி என்ற உணர்வைக் கொடுத்தது கடவுளின் கருணை என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். பசி என்ற உணர்வு மனிதனுக்கு இல்லையெனில் என்றால் நாளடைவில் மனிதன் சக்தியை இழந்து முடிவில் இறந்து விடுவான்.

மனித மனம் நிறைந்து இருந்தால் அங்கு ஆசை என்னும் தொட்டில் ஆடாது. மனம் வெற்றிடமாக இருக்கும்போது ஆசை அதனுள் புகுந்து விடுகிறது. மனதில் ஆசை என்னும் உணர்வு தோன்றியதும் துன்பமும் தொடர்ந்து அவனிடம் வந்து விடுகிறது. ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று புத்தர் கூறியுள்ளார். பொதுவாக ஓரிடத்தில் வெற்றிடமாக இருந்தால்தான் அங்கு பொருள் ஏதேனும் வைக்க முடியும். மனிதனுக்கு பசி என்னும் உணர்வு இருக்கும்போது அவன் உணவைத் தேடி உண்கிறான். அதேபோன்றுதான் மனதில் குறை இருக்கும்போதுதான் அங்கு வெற்றிடம் ஏற்பட்டு ஆசை உண்டாகிறது.

நமது மனம் பூரணத்துவம் அடையும்போது ஆத்மாவை உணர முடியும். ஆத்மாவுக்கு வேறுபட்டது அனாத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. மனம் நிறைந்து விட்டால் பூரண ஞானம் அடைந்து விட்டோம் என்று பொருள். மானிட மனம் பூரணத்துவம் அடையாமல் இருக்கும்போது அங்கு அநாத்மாக்கள் புகுந்து பலவிதமான துன்பங்களுக்கு நமது மனம் ஆளாக நேரிடும். எனவே அநாத்மாக்கள் என்பது உலகில் காணும் ஆசையைத் தூண்டக்கூடிய பொருட்கள் ஆகும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனிதனுக்கு அறிவு என்பது வந்து வந்து போய்க்கொண்டிருக்கும். எத்தகைய அறிவு(ஞானம்) நம்மை விட்டு செல்லாமல் நிலையாக இருக்கிறதோ அது ஆத்மா. அதேபோன்று பூரணத்துவம் சில நேரங்களில் வந்து வந்து போகும். அறிவைப்போன்று எந்த ஒரு பூரணத்துவம் நிலையாக இருக்கிறதோ அதுவே ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனிதனுக்கு உலகில் விரும்பிய பொருட்கள் கிடைத்தவுடன் அவன் மனம் மகிழ்ச்சி அடைகிறது. அப்பொருள் நம்மை விட்டு சென்று விட்டால் நமது மனம் கவலையில் மூழ்கி விடுகிறது. உலகில் உள்ள பொருள்கள் மூலம் அவ்வப்போது மனம் பூரணத்துவம் அடைவதுபோல் தோன்றும். அவ்வாறு தோன்றுவதற்கு காரணம் அப்பொருள்களின் மீதுள்ள மோகம் என்று கூறலாம். உலகப்பொருட்கள் அநித்தியமானவை என்று அறியும்போது அதன் மீதுள்ள ஆசை நம்மை விட்டு அகன்று விடும். எந்தப்பொருள் நித்தியமாக இருந்து மனம் பூரணத்துவம் அடைகிறதோ அதுவே ஆத்மா. ஆத்மாவை மற்ற பொருட்களைப்போல் தெளிவாக விளக்கிக் கூற முடியாது.

உலகில் காணும் பொருள் வேறு, அப்பொருளை அனுபவிக்கும் சுகம் வேறு ஆகும். நாம் அனுபவிக்கும் சுகமெல்லாம் அது ஆகாசச் சுகம். சர்க்கரை வேறு அதை அனுபவிக்கும் இனிப்பு சுவை என்பது வேறு. எது ஆனந்த ஸ்ரூபமாக இருக்கிறதோ எது வரையறுக்க முடியாததோ எது நித்தியமான பூரணத்துவம் அடைகிறதோ அதுவே ஆத்மா. எது சத் ஸ்ரூபமாகவும் சித் ஸ்ரூபமாகவும் ஆனந்த ஸ்ரூபமாகவும் அதுவே சச்சித்யானந்தம் என்னும் ஆத்மா. நமது ஸ்தூல சரீரம் நான் அல்ல. சச்சித்யானந்த ஸ்ரூபமாக எது இருக்கிறதோ அதுவே ‘நான்’ என்று என்று சாஸ்திரம் கூறுகிறது. .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

# எந்த மதத்திலும் இல்லாத யக்ஞம் என்ற தத்துவம்

உலகத்திலே பிரஸித்தமாயிருக்கும் மற்றபெரிய மதங்களில் இல்லாதது இந்த யக்ஞம் என்கிற தத்வம்.

வேதத்தை ஆதாரமாக கொண்டதாலேயே நம் மதத்துக்கு வைதிக மதம் என்ற பெயர் இருக்கிறது. இந்த வைதிக மதத்துக்கும் லோகத்தில் இன்று இருக்கும் பாக்கிப் பெரிய மதங்களுக்கும் ஒரு பெரிய வித்யாஸம் இருக்கிறது. கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான மதங்களில் ஒரே ஒரு கடவுளையே அனைவரும் வழிபடுவதைத்தான் சொல்லியிருக்கிறது. வேதங்களிலும், ‘இருப்பது ஒரே கடவுள்தான்; அவனேதான் இந்த ஜீவனும் கூட’ என்று சொல்லியிருக்கிறது.

ஆனால் அப்படிப்பட்ட ஒரே பரமாத்ம வஸ்துவை ஞானமார்க்கத்தில் ஆத்ம விசாரம் பண்ணி பண்ணித்தான் அநுபவத்தில் தெரிந்து கொள்ள முடிகிறது. அந்த நிலை அடைவதற்கு ரொம்பவும் பக்குவம் வேண்டியிருக்கிறது.

ஒரே கடவுளோடு நாம் ஐக்கியமாகி விடுகிற போது லோகமே நம் பார்வையிலிருந்து போய்விடுகிறது. அப்படிப்பட்ட நிலை வருவதற்குநம்மை எப்படிப் பக்குவப்படுத்திக் கொள்வது என்றால், இந்த லோக வாழ்க்கையில் நாம்நன்றாக ஈடுபட்டிருக்கிற இப்போதைய நிலையிலேயேதான்.

இதிலே இருந்து கொண்டே தர்மமாக வாழ்க்கை நடத்தி, கர்மாக்களைப் பண்ணிக் கொண்டேயிருந்தால், அதனால் நாம் சித்த சுத்தி அடைந்து பக்குவமாகிக் கொண்டே போகிற போது லோகம் நம்மை விட்டுப் போய்விடும்.

இதற்கான தர்மங்களையும் கர்மங்களையும் வேதம் யதேஷ்டமாக நமக்குக் கொடுத்திருக்கிறது. இவற்றிலே ரொம்ப முக்கியமான கர்மாதான் யக்ஞம், யக்ஞம் என்பது. யாகம் என்று பொதுவிலே சொல்கிறது இதுதான். ‘வேள்வி’ என்று இதற்கு ரொம்பவும் பழைய தமிழ்ப் பெயர் இருக்கிறது.

ஒரே பரமாத்மாவுக்காக இல்லாமல், பல தேவதைகளுக்கு ஆஹுதிகளை அர்ப்பணம் பண்ண வைப்பதே யக்ஞம்.

இந்த யக்ஞம் என்பதுதான், பாக்கி உலகப் பெரிய மதங்களில் இல்லாமல் நமக்கு மட்டும் இருப்பதாகும். கிறிஸ்துவம், இஸ்லாமில் உள்ள தெய்வக்கொள்கையும் இல்லாதது பௌத்தம். அந்த பௌத்தத்திலும் யக்ஞம் இல்லை.

யக்ஞத்திலே அநேக விதமான திரவியங்களை மந்திர பூர்வமாக அக்னியில் போடச் சொல்லி



யிருக்கிறது. இப்படிப் போடுவதற்கு ஹோமம் என்று பெயர். அக்னியில் போட்டாலும்அக்னிக்கே இந்தத் திரவியங்களை ஸமர்ப்பணம் பண்ணுவதாக அர்த்தமில்லை. அக்னியை உத்தேசித்த மந்திரங்களைச் சொல்லி அதில் போடுவது மட்டுந்தான் அக்னியைச் சேர்கிறது.

ஆனால் மற்றத் தேவதைகளான ருத்ரன், விஷ்ணு, இந்திரன், வருணன், மாதரிச்வன்(வாயு), ஸோமன் முதலானவர்களுக்கான ஆஹுதிகளையும் அக்னியில்தான் போடவேண்டும்.

அக்னி இவற்றைத் தானே எடுத்துக் கொள்ளாமல், இவற்றின் ஸாரத்தை அந்தந்த தேவதைக்கு அனுப்பிவைப்பான்.

பல அட்ரஸ்களுக்கு எழுதின கடிதங்களைஒரே தபால் பெட்டியில் போடுகிற மாதிரி பல தேவதைகளுக்குமான ஹவிஸ்களை(அவிகளை)அக்னியொன்றிலேயே ஆஹுதி பண்ண வேண்டும்.

மற்ற மதங்களுக்கும் வைதிக மதத்துக்கும் இருக்கிற பெரிய வித்யாஸம் ஒரே ஒரு கடவுள் என்று சொல்லி அவருக்கு மட்டும் வழிபாடு பண்ணுவது என்றில்லாமல், பல தேவர்களுக்கு அக்னிமுகமாக ஆஹுதி பண்ணுவதுதான். தேவர்கள் என்பவர்கள் பகவத் ஸ்ருஷ்டியில் உயர்ந்த சக்தி படைத்த ஒரு இனம்.

லோகத்தில் மநுஷ்யர்களான நாம் ஒருத்தருக்கொருத்தர் சேவை செய்து கொண்டால் பகவான் பிரீதி அடைகிறார் என்று சொல்கிறோமல்லவா? பூஜை, சடங்கு ஆகியவற்றை விட்டுவிட்ட சீர்த்திருத்தக்காரர்கள் கூட, "மக்கள் சேவையே மஹேசன் சேவை" என்கிறார்களல்லவா? இதே மாதிரி பரமாத்மாவின் படைப்பினத்தைச் சேர்ந்த தேவர்களுக்கு நாம் யக்ஞத்தின் மூலம் சேவை பண்ணினாலும், அவர் அநுக்ரஹம் பண்ணி விடுகிறார்.

ஒரே கடவுள்தான், ஒரேஸத்வஸ்துதான் அத்தனை தேவதைகளாகவும் ஆகியிருக்கிறது என வேதத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறது.

ஒவ்வொரு தேவதையைப் பற்றிச் சொல்லும்போதும், அதுவே பரமாத்மா என்று சிலாகித்துச் சொல்லியிருப்பதாலும் வேதம் ஒரேகடவுட்கொள்கை (monotheism) உடையதுதான் என்று தீர்மானமாகிறது.



பல தேவதைகளைச் சொல்லியிருப்பதால், 'வேதம் பல கடவுள்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது.

Polytheism- ஐச் சொல்கிறது' என்று நினைப்பது பிசகு. ஒரே கடவுள் பல தேவதைகளாயிருப்பதைத்தான் அது சொல்கிறது. பிரபஞ்ச வியாபாரத்தை நடத்துவதற்காக ஒரேபரமாத்மாதான் தன்னுடைய சக்தியைக் கொண்டே இந்தத் தேவதைகள் என்ற அதிகாரிகளை உண்டாக்கியிருக்கிறார். இயற்கை என்று நாம் சொல்கிறதில் உஷ்ணம், மழை, காற்று, உணவு, ஸந்ததி, செல்வம், மநுஷ்யனின் உணர்ச்சிகள் முதலான பல விஷயங்களையும் நிர்வாகம்பண்ணுவதற்காக இந்த தேவதைகளை நியமித்திருக்கிறார். நம்மைப் படைத்தது போலவே தேவதைகளையும் படைத்திருக்கிறார்.

நம்மைத் தன்னிலிருந்தேதான் படைத்தார். அதாவது அவரேதான் நாமாக ஆனார். அதனால்தான் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்று அத்வைதத்தில் சொல்வது. இதே மாதிரி தேவர்களாகவும் அவரேதான் ஆகியிருக்கிறார்.

ஆனாலும் நாம் அத்வைதத்துக்கு நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்கிற வரையில், நம்மை வேறு வேறாக நினைத்துக் கர்மாக்களைப் பண்ணி நமக்குள் பரஸ்பர ஸஹாயம் செய்து கொள்வதால், தேவர்களையும் தனித்தனியாக நினைத்து,அவரவர்களுக்குரிய யக்ஞ ஆராதனையைப் பண்ணத்தான் வேண்டும்என்பது வேதம் போட்ட சட்டம். லோக வாழ்க்கை நமக்கும் ஸகல ஜீவகுலத்துக்கும் அநுகூலமாக இருக்க வேண்டுமானால் பிரபஞ்சசக்திகளைப் பரமாத்மாவின் உத்தரவின்படி நிர்வாகம் பண்ணி வரும் தேவதைகளின் அநுக்ரஹம் நமக்கு இருக்கவேண்டும் என்று சொல்லி, அவர்களின் அநுக்ர ஹத்தைப் பெற்றுத்தரவே அவர்களுக்குப் பிரீதியாக யக்ஞங்களைப் பண்ணவேண்டும் என்று வேதம் சொல்கிறது * . ஞானம் வந்தபின் இந்த தேவர்கள் வேண்டாம். நேராகப் பரமாத்மாவை உபாஸிக்கலாம். ஆனால் த்வைதப் பிரபஞ்சத்திலிருந்து கொண்டே, இதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகளை நாம் செய்கிற காலத்தில், வேறு வேறாக தேவதைகளையும் உபாஸிக்கத்தான் வேண்டும் என்று வைத்திருக்கிறது.

– தெய்வத்தின் குரல்
இரண்டாம் பாகம்

# திங்கட்கிழமை அபிஷேகம் செய்து வழிபடுபவர்களின் சகல சாபங்களையும் போக்கும் ஐராவத க்ஷேத்திரம்







மனநிறைவோடு வணங்கினால் மனங்குளிரச் செய்யும் மகேசன் உறைந்திடும் திருத்தலங்கள் இம்மண்ணில் எண்ணிலடங்காதவை.

அவற்றுள் மண்ணையெல்லாம் பொன்னாக்கும் பொன்னி நதிக்கரை என்றால் அலாதி விருப்பம் அந்த அரனாருக்கு....

அப்படியொரு அற்புதத் திருத்தலமாகத் திகழ்கிறது ஐராவதம் ஆராதித்த மேல மருத்துவக்குடி.

ஆதியில் வில்வக்காடாய் திகழ்ந்த இப்பதி பூகயிலாயம், தட்சிண கயிலாயம், கதம்பவனம், வில்வாரண்யம், ஐராவதபுரம், மருத்துவாக்புரம், ஆதிசேஷபுரம் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது.

அகத்தியர், வாமதேவர், கௌசிகர், காளவர், விசுவாமித்திரர், வேதமுனி, கரஸர், காலர், வியாசர், குத்சர், பரத்வாஜர், ஜாபாலி, பதஞ்சலி, வியாக்ரபாதர், சந்திரன், இந்திரன், ஐராவதம், மருத்துவாசுரன், பிரம்மா, அக்னிதேவர், ஸ்ரீ லக்ஷ்மி தேவி, ஆதிசேஷன் போன்றவர்கள் இத்தல ஈசனை வழிபட்டு வரங்கள் பல பெற்றுள்ளனர்.

துர்வாச முனிவரின் சாபத்தால் நிலைகுலைந்த ஐராவதம் சாபநிவர்த்தி அடைந்த திருத்தலம்.

மிகவும் விசேடமான விருச்சிக ராசிக்கு உகந்த விநாயகர் வீற்றருளும் பதியிது.

அன்னை அபிராமி உறையும் ஆறு ஆதார ஸ்தலங்களுள் ஒன்று.

சத்தியவிரதன் என்பவனது பாம்புக்கடி விஷத்தை போக்கிய மிருதசஞ்சீவினி தீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்ட தன்னிகரற்ற திருப்பதி.

அப்பர் பாடிய வைப்புத்தலமான திருஇடைக்குளம் என்னும் க்ஷேத்திரமும் இதுவே. இத்தலத்தில் அருணகிரிநாதர் திருப்புகழ் இரண்டை பாடியுள்ளது சிறப்பு. அதோடு, பட்டினத்தாரும், வள்ளல் இராமலிங்கரும் போற்றிப் பாடியுள்ளனர் இவ்வாலய ஈசனை..

அப்பைய தீட்சிதரின் வம்சாவளியால் இவ்வாலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது விசேடம்.

தோல் வியாதிகள் போக்கும் தலமாகவும், திருமணத் தடைகள் நீக்கும் பதியாகவும், விருச்சிக இராசி க்ஷேத்திரமாகவும் திகழப்பெறுகின்றது இந்த மேலமருத்துவக்குடி.

1.மருத்துவாசுரன்

கௌட தேச பிராமணன் ஒருவன் எள் தானம் வாங்குவதை வழக்கமாக கொண்டதால் மேருமலைபோல் அவனது பாவம் மிகுந்து, வாயு மண்டலம் வரை உயர்ந்தது. இதனால் கரிய நிறம் கொண்ட பிரம்ம ராட்சஸன் ஆனான். மருத்துவாசுரன் என்னும் பெயர் கொண்டான்.

பல மிருகங்களையும், பட்சிகளையும் தின்று, பின்னர் வாமதேவ முனிவரையும் பிடித்து தின்ன முற்பட்டபோது, முனிவர் தரித்திருந்த விபூதியும், ருத்திராக்ஷமும் அவன் மீது பட்டு, அவன் பழைய நிலையை அடைந்தான். பின் வாமதேவமுனிவரின் ஆலோசனைப்படி வில்வ வனமாக இத்தலத்தில் சிவனை நோக்கி 12 வருடகாலம் தவமியற்றி, 12 சிம்ம பலத்தினை தனது கரங்களில் பெற்றான், மருத்துவாசுரன்.

அக்னி, எமன் மற்றும் இந்திரனை வென்றான். இந்திரன் பயந்து, பூவுலகில் இந்த வில்வவனத்தில் ஈசனை சரணடைந்தான்.

சிவனது கட்டளைப்படி கயிலாய நந்தவனக் காவலனான மணிபத்திரன், மருத்துவாசுரனின் மார்பில் அடிக்க..... பின் அகோரமூர்த்தியால் வதைக்கப்பட்டான். இதனால் இப்பதி அவனது பெயரிலேயே மருத்துவக்குடி என்று ஆனது.

2. ஐராவதம்

திரேதாயுகத்தில் விஜயதசமியன்று மற்ற திக்பாலகர்களுடன் பூவுலகில் சிவ பூஜைகளை முடித்துக் கொண்டு, அமராவதிப் பட்டிணத்தை நோக்கி தனது வாகனமான ஐராவதத்தின் மீது சென்று கொண்டிருந்தான் தேவேந்திரன்.

அப்போது எதிர்கொண்ட துர்வாச முனிவர், கயிலாயத்தில் சிவபெருமானைப் பூஜித்தசிவ நிர்மால்யமான எருக்கும்பூ மாலையை தேவேந்திரனுக்கு ஆசீர்வதித்துக் கொடுத்தார். அம்மாலையை வாங்கிய இந்திரன், அதை அணிந்து கொள்ளாமல், அலட்சியமாக ஐராவதத்தின் மீது வைத்தான். அதை தனது துதிக்கையால் எடுத்த ஐராவதம், உதறித் தெறித்து, காலில் இட்டு மிதித்தது. இதை கண்ட துர்வாசர் கடுங்கோபம் கொண்டார்.

இந்திரனே ! உனது ஆணவத்தால் யாருக்கும் கிடைக்காத மிக உயர்ந்த சிவ நிர்மால்யத்தை அவமதித்தாய். அதனால் நீ உனது பதவியையும், எல்லாவித செல்வங்களையும் இழப்பாய் என்றும், ஐராவதத்தை... நிறம் மாறி, தந்தங்கள் இழந்து, காட்டு யானையாக மதம் பிடித்து அலையும்படியும் சபித்தார்.

இந்திரன் நடுநடுங்கிப் போனான். ஐராவதமோ பயத்தால் பதைபதைத்தது. இந்திரனும், ஐராவதமும் உடன் துர்வாசரை விழுந்து வணங்கி, மன்னிப்பு கேட்டதோடு விமோசனமும் வேண்டி நின்றனர்.

மனம் இறங்கிய மாமுனிவர் துர்வாசர், பூவுலகில் வில்வ வனமாகத் திகழும் மருத்துவக் குடியில் சென்று வழிபட, இறைவன் திருவருளால் சாபம் நிவர்த்தியாகும் எனக் கூறி அங்கிருந்து மறைந்தார்.

அடுத்த கணமே அனைத்தையும் இழந்த அமரர் தலைவன் அகிலமெங்கும் தரிந்தான். ஐராவதமும் காட்டு யானையாக மாறி, பார் முழுதும் திரிந்து பரிதவித்தது.

இறுதியாக ஐராவதமும், இந்திரனும் வில்வ வனத்தை அடைந்தனர்.

ஐராவதம் இங்கு பரவியிருந்த வெண்மணலைக் கொண்டு, தனது துதிக்கையால் சிவலிங்கம் பிடித்து, அருகிலிருந்த திருக்குளத்தி லிருந்து நீர் எடுத்துவந்து, ஐயனை மனமொன்றி பூஜித்தது. உடன் இந்திரனும் மனமுருகி வழிபட் டான்.

இவ்வாறு பல காலம் பூஜை செய்து வந்த வெண்யானைக்கு மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இறைவன் காட்சி தந்து சாப விமோசனம் அருளினார். ஐராவதம் இரண்டு கோரிக்கைகளை ஈசனிடம் முன் வைத்தது.

1. அடியேன் இங்கு வழிபட்டதன் காரணமாக இந்த தலம் ஐராவத க்ஷேத்திரம் என்று அழைக்கப்பட வேண்டும்.

2. தங்களுக்கு ஐராவதேஸ்வரர் என்கிற திருநாமம் வழங்கப்பட வேண்டும்.





இவ்விரு கோரிக்கைகளையும் ஏற்ற எம்பெருமான், அப்படியே ஆக வேண்டி அருள் புரிந்தார்.

அதோடு, இறைவன்.... இங்கு எம்மை திங்கட்கிழமைகளில் அபிஷேகம் அர்ச்சனை ஆராதனை செய்து வழிபடுபவர்களுக்கு சகல சாபங்களிலிருந்தும் விமோசனம் கிடைக்கும் என்றும், உடம்பில் உள்ள தோல் நோய்கள் நீங்கி, உடல் நலம் பொலிவு பெறும் என்றும் திருவருள் கூட்டுவித்தார்.

### 3. அபிராமித் தலங்கள் :

சோழ தேசத்தை ஆட்சி செய்த மன்னர்கள் திருக்கடையூரையும், அதை சுற்றியுள்ள ஐந்து தலங்களையும் சேர்த்து, ஆறு ஆதார பீடங்களாக, ஆறு அபிராமித் தலங்களை மந்திர பூர்வமாக ஸ்தாபனம் செய்தனர். அதில், முதலாவதாக... சஹஸ்ராரம் திருக்கடையூர் அபிராமியையும், இரண்டாவதாக... ஆக்ஞா மேலமருத்துவக்குடி (இந்த தலம்) அபிராமியையும், மூன்றாவதாக.... அனாகதம் வானாபுரம் அபிராமியையும், நான்காவதாக.... மணிபூரகம் குழையூர் அபிராமியையும், ஐந்தாவதாக..... சுவாதிஸ்டானம் இளந்துறை அபிராமியையும், ஆறாவதாக மூலாதாரம் திருமலைராயன்பட்டினம் அபிராமியையும், ஆறு சக்கரங்களாக வகுத்து, கருங்கல் கட்டிடமாக நிறுவினர்.

இங்குள்ள அம்பாள் ஆக்ஞா சக்கரமென்னும் புருவ மத்தியில் வீற்றிருப்பதால், கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறவும், சிறந்த மண வாழ்க்கை அமையவும், தம்பதிகள் குடும்பத்தில் அன்யோன்யமாக வாழவும், நல்ல சத்புத்திரர்களைப் பெறவும் அருள்பாலிக்கின்றாள்.

### 4. விருச்சிக கணபதி :

தக்ஷனின் சாபத்தால் சந்திரனுக்கு க்ஷயரோகம் ஏற்பட்டு, தனது பதினாறு கலைகள் குறைந்து, பொலிவிழந்தார். அப்போது, விருச்சிக இராசி, அனுஷ நட்சத்திரத்தில், சந்திரன் நீசம் பெறும் காலத்தில், கணபதியை வேண்டிட, கணபதியின் கருணையால் இந்த மருத்துவக்குடி தலத்திற்கு வந்து, தனது பெயரால் தீர்த்தம் உண்டாக்கி, ஐராவதேசுவரர் அன்னை அபிராமி மற்றும் கணபதியை அபிஷேகித்து வழிபட்டார். கணேசரது அருளினால், கார்த்திகை மாதம் (விருச்சிக மாதம்) திங்கட்கிழமையன்று சாபம் நீங்கி, ஷோடஸ கலைகள் யாவும் வளரப்பெற்று, ஒளிமயமாகி, தனது பழைய நிலையினை அடைந்தார் சந்திர பகவான்.

அதுமுதல் இத்தல கணபதியை வழிபட, ஸ்த்ரீ சாப விமோசனமும், தம்பதிகள் அன்யோன்யமும் உண்டாகிட வேண்டுமென்கிற சந்திரனது கோரிக்கையை ஏற்றார் கஜமுகர். அதோடு, விருச்சிக கணபதி என்கிற திருநாமமும் இவருக்கு உண்டாயிற்று.

### 5. ஆலயம்:

கிழக்கு நோக்கிய 5 நிலைகள் கொண்ட இராஜகோபுரம் எழிலுற அமைந்துள்ளது. உள்ளே நுழைந்ததும், விசாலமான வெளிப் பிராகாரம். நேராக நந்தி மண்டபம் மற்றும் பலிபீடம். வடபுறத்தில் அம்பிகையின் தனிச் சன்னிதி ஒரு திருச்சுற்றுடன் திகழ்கிறது. முன் மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகிய அமைப்பிலான சன்னிதிகள் வரிசையாகத் திகழ அம்பிகையாக ஸ்ரீ அபிராமி எழில் கொஞ்சும் வடிவினில் தென்திசை பார்த்து, புன்னகை பூத்து நிற்கின்றாள். மேலிரு கரங்களில் அக்ஷமாலையும், நீலோற்பலமும் கொண்டு, கீழிரு கரங்களில் அபய முத்திரை காட்டியும், இடது கரத்தை இடுப்பினில் மடித்தும், அருள்பாலிக்கின்றாள்.



மோ.கணேஷ்

அம்பாளை வலம் வந்து முடித்து, இரண்டாம் வாயிலை அடைந்திட... முன்மண்டபம் திறந்தவெளி மண்டபமாக நிமிர்ந்து நிற்கிறது.

மூன்றாம் வாயிலை அடைகின்றோம். மூடுதளமாக மகா மண்டபம், இடை மண்டபம் மற்றும் கருவறை ஆகிய அமைப்பினில் இறைவனின் திருச்சந்நிதி காணப்படுகின்றது. அர்த்த மண்டபத்தில் கணபதி

மற்றும் கந்தன் தரிசனமளிக்கின்றனர். கருவறையுள் கவின்மிகு வெள்ளை நிறத்தினில் லகுலீசராக (சிறிய வடிவில்) அருட் தரிசனம் தந்தருள்கின்றார் ஸ்ரீ ஐராவதேஸ்வரர். ஐராவதம் என்னும் வெள்ளை யானையால், வெண்மணலால் உண் டான இப்பெருமான் அகிலம் உய்ய அற்புதமாய் இங்கே அருள்புரிகின்றார்.



இறைவனை தரிசித்த பின்னர் ஆலயவலம் வருகையில், தென்மேற்கு மூலையில் வாமன ரூபராய் திருவருள் பொழிகின்றார் ஸ்ரீ விருச்சிக விநாயகர். மேற்கில் வள்ளி தெய்வானை சகிதராக வீற்றருள்கின்றார் ஸ்ரீ ஞானஸகந்தர். வடமேற்கில் கஜலட்சுமியின் திவ்ய தரிசனம்.

ஏனைய கோஷ்ட தெய்வங்கள் ஆலயத்தை முறையை அலங்கரிக்க... கலையெழில் அமைப் பாய் திகழ்கிறது கோவில். சோழர் காலகல்வெட் டுகள் பல இடங்களில் பரவிக் கிடக்கின்றன.

தல விருக்ஷமாக வில்வம் திகழ்கிறது. தல தீர்த்தங்களாக.... சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், யம தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், காஷ்யப தீர்த்தம், கௌதம தீர்த்தம், சேஷ தீர்த்தம், மிருத சஞ்சீவினி தீர்த்தம் ஆகிய தீர்த்தங்கள் உள்ளன.

இத்தலத்தின் விசேடங்களாக.....பொதுவான சிவாலய விசேடங்களோடு... நவராத்திரியில் 10ம் நாள் பார்வேட்டை உற்சவமும், கந்தர் சஷ்டியில் ஆறு நாட்கள் சிறப்பு ஹோமமும், ஆறாம் நாள் சூரசம்ஹாரமும், ஏழாம் நாள் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகின்றன. ஆடி மாத வெள்ளிக்கிழமைகளில் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன.

பிரதி பௌர்ணமிதோறும் அன்னை அபிரா மிக்கு அபிராமி அந்தாதி பாராயணம் விசேடமாக செய்யப்படுகின்றது. அதோடு, ஸ்ரீ கஜலட்சுமிக்கு விசேஷ ஹோமமும், சிறப்பு அபிஷேகமும், கோ பூஜையும் நடைபெறுகின்றன.

பிரதி திங்கட்கிழமைகளில் ஸ்வாமிக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும், பிரதி வெள்ளிக்கிழமை களில் அம்பாளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும் நடக்கின்றன. பிரதி சனிக்கிழமைகளில் கிழக்கு நோக்கிய சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபி ஷேகமும், பிரதி ஞாயிறுகளில் இராகு காலத்தில் துர்க்கைக்கு சிறப்பு அபிஷேக, அர்ச்சனை வழிபாடும் நடத்தப்படுகின்றன. 1008 தீப வழிபாடு பிரதி கார்த்திகை சோம வாரங்களில் சிறப்புற நடைபெறுகின்றன.

தினமும் மூன்று கால பூஜைகள் நடந்திடும் இவ்வாலயம் காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரை யும் திறந்திருக்கும். இவ்வாலய கும்பாபி ஷேகம் கடைசியாக 2006ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது.

### 6. பரிகாரங்கள் :

1. விருச்சிக இராசி மற்றும் விருச்சிக லக்னத்தில் பிறந்தவர்கள், சனி செவ்வாய் சேர்க்கை பெற்றவர்கள், ஸ்ரீ விருச்சிக விநாயகருக்கு அபிஷேகம் நடத்தி, அர்ச்சனை செய்திட சிறப்பான பலன் கள் உண்டு.

2. கல்யாண வரம் மற்றும் குழந்தை வரம் வேண்டுவோர் ஸ்ரீ அபிராமி அன்னைக்கு அபிஷேகம் நடத்தி, ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்ய, சிறந்த பலன்களை பெறலாம்.

3. கந்தர் சஷ்டியில் முருகருக்கு சாற்றிய மாலையை அணிந்து, திருமண வைபவத்தில் தரும் இனிப்பை உண்டும், கல்யாண பிராப்தியும், பிள்ளை வரவும் பெற்றுள்ளனர் பலர்.

4. சிறப்புப் பரிகாரமாக 12 ஜோதிர்லிங்கங்களை வரைந்து, 1008 தீபங்களை ஏற்றி, லிங்கங்களுக்கு தனித்தனி பிரசாதங்களை நைவேதித்து, வழிபடும் அன்பர்கள் தங்களது கோரிய வரங்களை பெறுகின்றனர்.

5. சுவாமிக்கு அபிஷேகம் செய்த தீர்த்தம் மற்றும் பாலை பருகிட நாட்பட்ட தோல் வியாதி கள் நீங்குகின்றன.

6. இத்தலத்தின் விசேஷமான 9 தீர்த்தங்களில் நீராடி, ஐராவதேசுவரரையும், அன்னை அபிராமி யையும் வழிபட... பிள்ளைப்பேறு, குரு துரோக நிவர்த்தி, மரண பய நீக்கும், கேட்கும் வரம், நவக்கிரக தோஷ நிவர்த்தி போன்ற உயரிய பலன்களை பெறுவது திண்ணம்.

### 7. வழி

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர்வட்டத் தில் உள்ள இந்த திருத்தலம், கும்பகோணம் மயிலாடுதுறை பேருந்து சாலையில் உள்ள ஆடுதுறையில் இருந்து 3 கிலோமீட்டர் தொலை வில் அமைந்துள்ளது. ஆலயத் தொடர்புக்கு: சிவஸ்ரீ சம்பந்த குருக்கள்: 9443853212

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# மனிதன் என்பவன் யார்?

மனிதன் என்பவன் யார்? இவன் எங்கே இருக்கிறான்? இவன் உலக கலாச்சாரத்திற்குள் இருக்கிறான். உலக கலாச்சாரம் என் பதே மனிதன். நீங்கள் ஒவ்வொருவருக்கும். உலக கலாச்சாரத் தில் தான் இருக்கிறேன் என்று எண்ணுதல்வேண்டும்.

பிறகே, நீங்கள் மனிதனாக வாழமுடியும். மனிதத் தன்மை உள்ளவனாகவும் இருக்க முடியும். இதற்கே மனிதன், கலாச்சாரம், என்ற இரண்டு பெயர்கள் வந்தன. நாம் இந்திய கலாச்சாரத்தை மட்டும் உணர்ந்தவர்களாக இருந்தால் முதலில் இந்தியர்களாக மட்டுமே இருக்க முடியும். அனைவரும் உலக மனிதர்களாக ஆக நினைத்தல் வேண்டும். மனிதன் ஒவ்வொரு காரியத்திலும் வேலை செய்து அந்த வேலைக்கு உரிய சம்பளத்தை வாங்கு கிறான். அது போன்றதே நாம் ஒவ்வொருவரும் இன்ன.

இன்ன நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லுவதற்கு ஒப் பாகும். இந்த நிலையிலிருந்து மனிதன் விரிவடைதல் வேண்டும். இதுவே, மனிதத்தன்மை ஆகும். ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பு என்பது சிறப்பாக கிடைத்திருக்கிறது. இது கிடைத்தது எதற்காகத் தெரியுமா? நீ உலகமனிதனாக ஆக வேண்டும் என்பதற்காகவே கிடைத்திருக்கிறது. இந்த உண்மையை உணருங்கள்.

நம்மை உலக மக்கள் அனைவரும் உணரவேண்டும். நம்மிலே ஒருவன்தான் இவன் என்று உலகம் நம்பவேண்டும். இதற்கு ஒரே வழி உலக கலாச்சாரம் என்பதே மனிதன் என்று நீ கொண்டால் அது உடனே பயன்தரும். இத்தகைய மனிதர்கள் உலகில் எந்த பாகத்தில் வாழ்ந்தாலும் சரியே. அவர்களையே உலகம் நம்புகிறது. நாம் உலக மனிதனாக வாழத் தொடங்கிவிட்டால் உலக மனிதன் என்பதற்கு அதுவே ஒரு நற்சாட்சிப் பத்திரம் ஆகும். இதைப் பெற முயலுங்கள்.

இன்று மனிதன் கல்வியினால் தனக்கு பல நற்சாட்சிப் பத்திரங் களைப் பெற்றுக் கொள்கிறான். இதனால் பயன் உள்ளதை நீங்களே பார்க்கிறீர்கள். நம்மிடையே கற்றவர்களில் பலர் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். எப்பொழுதும் சிலரோ பலரோ, சமுதாயத்தின் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இதை கவனத்தில் கொண்டால் எனது பேச்சின் உண்மை உனக்குத் தெரியும். உலக மனிதர்களும் சிலரோ, பலரோ, எப்பொழுதும் செல்வத்தை சம்பாதித்து பணக் காரர்களாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

சிலராவது பொறுப்புள்ள தொழிலில் இருக்க வேண்டும். பொறுப் புள்ள தொழில் ஆசிரியராக இருப்பதே ஆகும். சிந்தனை உலகில் இந்த பதவிக்கு ஆசிரியர் என்று பெயர். தெய்வீக உலகத்தில் இப்பதவிக்கு குரு என்று பெயர். ஆசிரியன் கற்பிப்பான். குரு உபதேசிப்பான். உபதேசம் நெறியைக் காட்டும். நெறி என்றால் வழி. ஆசிரியர் கற்பித்த கல்வி நாம் பயணம் செய்யும் வழியில் உள்ள கற்கள். முட்கள். இவைகளை தூக்கி எறிய, அறிவு பிறக்கும். அறிவும் உபதேசமும் மனித உள்ளம் என்ற கடலுக்குள் இருக்கின்ற 2 முத்துக்களாகும். இந்த முத்துக்களை குளித்து எடுக்க தயாராக இருங்கள்.

– ஞானிகள் அருளிய “ஞானக் களஞ்சியம்” (பாகம்–8) என்ற நூலிலிருந்து



## *கிணற்றுத் தவளை*

ஒரே ஒரு ஊரில் முட்டாள் வியாபாரி ஒருவன் இருந்தான். கழுதையின் முதுகில் ஒரு பெரிய நெல் முட்டையை ஏற்றினான். ஒரு பக்கமாக சாய்ந்த நெல் மூட்டையின் கனத்தைச் சரி செய்ய மறுபக்கம் அதே எடையுள்ள மண் மூட்டையை ஏற்றினான். கழுதை சிரமப்படக் கூடாது என்பது அவன் எண்ணம். அந்த வழியாகச் சென்ற ஒரு ஏழை, வியாபாரியைப் பார்த்து ஏன் கழுதை மேல் அவ்வளவு சுமையை ஏற்றுகிறாய்?.. நெல் மூட்டையை இரண்டாகப் பகிர்ந்து பக்கத்திற்கு ஒன்றாக ஏற்றேன். கனம் சரி சமமாக இருக்கும் என்றான். வியாபாரிக்கு கோபம் வந்தது. உன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது? என்றான். என்னிடம் ஒன்றும் இல்லை என்றான்

ஏழை. அப்படியானால் என்னிடம் பேசாதே. உன் அபூர்வ சிந்தனைகளை உன்னிடமே வைத்துக் கொள். உன் பேச்சைச் கேட்டால் உன்போல் ஏழை ஆகிவிடுவேன் என்றான்வியாபாரி.

அந்த முட்டாள் வியாபாரி போல்தான் நம்மில் அநேகர் இருக்கிறோம். ஞானிகள், மகான்கள் சொல்வதைக் கேட்காமல் நம் இஷ்டப்படி நடந்து வாழ்க்கையில் கஷ்டப்படுகிறோம். இந்த முட்டாள்தனத்தை மாற்றிக் கொள்ள வேண்டாமா?

ஒரு தேசத்தில் அடிமைகள் அநேகம் பேர் சிறையில் அடைக் கப்பட்டிருந்தனர். அவர்களைப் பார்க்க கனவான் ஒருவன் ஒருநாள் வந்தான். அவர்களின் கஷ்டத்தைப் பார்த்து நல்ல உணவு வகைள் தரும்படி அதிகாரிகளுக்குச் சொல்லி அதற்கு பணமும் தந்தான்.

மற்றொரு நாள், இன்னொரு வள்ளல் வந்து நல்ல உடைகளை தந்து உதவினான்.

இன்னொரு நாள் வேறொரு தனவந்தன் வந்து மருந்துகளை கொடுத்து உதவினான்.

எல்லோரும் அடிமைகளுக்கு மனமுவந்து உதவிகள் செய்தனர். ஆனால், அவர்கள் அடிமைகளாகவே இருந்தனர்.

கடைசியில் பணம் ஏதுமில்லா ஒரு ஞானி வந்தான். ஆனால் அவன் கையில் சிறைக் கதவுகளின் சாவி இருந்தது. கதவைத் திறந்துவிட்டான். இனி நீங்கள் சுதந்திரப் பறவைகள். உங்கள் சொந்த இடத்திற்குப் போங்கள்..என்றான்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

குழந்தைகளே! இந்த நால்வரில் யார் மிகவும் உயர்ந்தவர்? ஞானிகள்தானே..

இந்த உலகம் என்ற சிறையில் அடிமைகளாக இருக்கும் நம்மை பக்தி, கருணை. என்ற சாவிகளைக் கொண்டு விடு விக்க வந்திருக்கும் ஞானிகளிடம் நாம் அன்பாக இருக்க வேண்டாமா?

ஒரு கிணற்றில் தவளை ஒன்று இருந்தது. அங்கு கொக்கு ஒன்று வந்தது, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?" என்றது தவளை. "நான் ஒரு பறவை. ஏரி, குளம்.. முதலிய இடங்களில் இருப்பேன்" என்றது கொக்கு.

"நீ இருக்கும் இடம் இதைவிட அழகானதா" என்றது தவளை. "ஆமாம் இதைவிட அழகானது. பெரியதும் கூட" என்றது கொக்கு. "உளராதே..இந்த பெரிய இடத்தை விடவா பெரிது".. என்று சொல்லி கிணற்றை சுற்றி வந்து களைப்புடன் அமர்ந்தது. "இதைவிட மிகமிகப் பெரியது என்றது..கொக்கு". "உன்னுடன் பேசி என் நேரத்தை வீணாக்கினேன் பார். இதைவிட அழகானது பெரியதே கிடையாது"..என்று சொல்லி விட்டு கிணற்றுக்குள் மறைந்தது தவளை. நாம் நடத்தும் சாதாரண உலக வாழ்க்கையைவிட உயர்ந்த அழகான தூய்மையான வாழ்க்கை ஒன்று இருக்கிறது..என்று சொல்லும் ஞானிகளை, மகான்களை அந்த கிணற்றுத் தவளைப் போல தூக்கி எறிகிறோமே. நியாயமா? சிந்திக்க வேண்டாமா?

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்
•••
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்
ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு கொள்ளவும்
9444228203

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




**இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க**










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்











# நொய்டா முருகன் கோவிலில் 'தை பூசம்' விழா கோலாகலம்

நொய்டா முருகன் கோவிலில் 'தை பூசம்' வெகு சிறப்பாக நடத்தப்பட்டது

தை பூசத்தை முன்னிட்டு பக்தர்கள் காவடி, பால்குடம் எடுத்தனர். தைல எண்ணெய், திரவியப் பொடி, மாப்பொடி, மஞ்சள், பஞ்சம் ருதம், பால், தயிர், தேன், கரும்புச் சாறு, பல்வேறு பழச்சாறுகள், நெய், விபூதி, ஆகிய வற்றைக் கொண்டு மகா அபிஷேகம் செய்யப்பட்டது.

சந்தனம். வெள்ளை, மஞ்சள் சாமந்தி, ரோஜா, பச்சை மாலை, அரளி, கடம்பம் என ஆறு வகையான மலர்களால் ஸ்ரீ கார்த்திகேய பகவான் அலங்கரிக்கப்பட்டார்.

வந்திருந்த பக்தர்கள், 'வெற்றி வேல் முருக னுக்கு ஹரோ ஹரா' என கோஷமிட்டு, ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி கவசம், ஸ்ரீ கந்தர் அனுபூதி, முருக கோஷம் ஸ்லோகங்களை வாசித்து, முருகப்பெருமான் மீது பல்வேறு பக்தி பாடல்களை பாடினர். ஸ்ரீ மணிகண்டன் சர்மா வாத்தியார், ஸ்ரீ மோஹித் சர்மாவின் உதவியால், ஸ்ரீ கார்த்திகேயப் பெருமானுக்கு அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது, தமிழகம் முழுவதும் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள முருகன் கோயில்களில் செய்யப்படுவது போல், அதே வழியில் செய்யப்பட்டது. .

நொய்டாவின் வேத பிரச்சார் சன்ஸ்தான் அதன் இரண்டு கோயில்களை நிர்வகிக்கிறது: நொய்டாவின் செக்டார் 62 இல் அமைந்துள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோயில், இது நொய்டா ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட 1000 சதுர மீட்டர் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது, மேலும் இந்த கோயிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆகஸ்ட் 21, 2022





ஞாயிற்றுக்கிழமை மட்டும், மற்றும் அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில், பிரிவு 22, இக்கோயிலின் கும்பாபிஷேகம் ஆகஸ்ட் 29, 2022 அன்று நடைபெற்றது.

கோயில் நிர்வாகம், அனைத்து பக்தர்களின் நலன் கருதி, கடந்த பல ஆண்டுகளாகத் தடை யின்றி கீழ்க்கண்ட குழு பாராயணங் களை நடத்தி வருகிறது:

வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம், ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி கவசம், ஸ்ரீ கந்தர் அனுபூதி, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முருக கோஷம்.

நொய்டா மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து வந்திருந்த 150க்கும் மேற்பட்ட பக்தர்கள் கோயிலுக்கு வந்து தைபூச விழாவில் கலந்து கொண்டு சுவாமிகளின் அருள் பெற்றனர்.



எஸ்.வெங்கடேசன்

கோயில் நிர்வாகம் அதன் பக்தர்கள் அனைவருக்கும், குறிப்பாக அர்ஜுன், ராமன், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலியின் மகளிர் பிரிவு மற்றும் VPS உறுப்பினர்கள்: ராமசேஷன், ராஜு ஐயர், ஏ பாலாஜி, ராஜேந்திரன், வெங்கட்ராமன், Wg Cdr சந்திரசேகர், ஸ்ரீதர் ஐயர், கோபால், காசி விஸ்வநாதன், ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.

மகா தீபாராதனையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்து அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
Free e-book

e-Book FREE DOWNLOAD
Scan to Read aanmeegamalar Website







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# மனத் தெளிவும் இறை நம்பிக்கையும்

‘மனமது செம்மையானால் மந்திரங்கள் தேவையில்லை’ என்ற தத்துவத்தின் உள்ளார்த்தம் மிக அற்புதமானதாகும்.

இறைவழிபாட்டில் மந்திரம் என்பது ஒருபகுதி, இதை தொடர்ந்து சொல் லும்போது மனம் அந்த மந்திரத்தில் லயித்து, இறைவனை அடைய உதவும், ஆனால் நமது மனம் ஏற்கெனவே செம்மையாக இருக்கும்போது எந்த மந்திரத்தையும் உச்சரிக்க வேண்டியதில்லை.

ஆனால் இந்த மனதை செம்மைப்படுத்தி ஒரு நேர் கோட்டில் எடுத்துவருவது மிகச் சிரமமான தாகும்.

மனது இறை நிலையுடன் ஐக்கியமாகும்போது செய்யும் அனைத்து செயலையும் இறைவன் ஏற்பான். மற்றவர் கண்களுக்கு அச்செயல் வெறுப்பை தந்தாலும், இறைவன் அதை விரும்பி ஏற்பான்.

உதாரணத்திற்கு சொல்லவேண்டு மானால், கண்ணப்பர் வரலாறும் ஆண்டாள் வரலாறுமே சாட்சியாகும்.

ஆண்டாள் தான் சூடிய மாலையை இறை வனுக்கு சமர்பித்ததை இறைவன் ஏற்றுக் கொண் டான், ஆனால் அவரின் தந்தையும், அந்நாட்டு மன்னனும், ஆண்டாள் சூடிய மாலை என்று தெரிந்ததும், முதலில் கோபப்படத்தான் செய்தனர்.

இறைவனே அசரீரியாக ஆண்டாள் சூடிய மாலையை தான் ஏற்பதாக கூறிய பின்பே அவர் களின் கோபம் தனிந்தது.

ஆண்டாளின் மனம் இறைநிலையுடன் ஒன்றி ணைந்ததால், இறைவன் அதை ஏற்றான்.

ஆண்டாளைப் பார்த்து நாம் அப்படி செய்ய முடியுமா??? ஆண்டாள் தன் மனதை மட்டுமல்ல, தன் சிந்தனை செயல் அனைத்தையும் இறை வனுடன் ஒன்றிணைத்துவிட்டாள், ஆனால் நாம்?

நமது மனம் இன்னு அலைபாயும் அலையைப் போன்று கரையைத் தொட்டு பின்வாங்கிச் சென்றுக் கொண்டிருப்பதால் அருகில் இறைவன் இருந்தாலும் கல்லாகத்தான் வழிபட்டுக் கொண் டிருக்கிறோம்.

மனதை ஒருநிலைப்படுத்த முதலில் நாம் பழகிக் கொள்ள வேண்டும். சிறிய சிறிய விஷ யங்களின் மூலம் மனதை கட்டுப்படுத்த தெரிந்து கொண்டால் அடுத்த நிலை... அடுத்த நிலை என்று முன்னேறிச் செல்லலாம்.

அடுத்தடுத்த நிலைக்கு மனதை அழைத்துச் செல்ல பழகிக் கொண்டால் மனித வாழ்க்கையில் சுக, துக்கம் என்ற மாயை தானாகவே மறைந்து விடும். உடலுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். மனதெளிவு பல்வேறு வெற்றிகளைத் தேடி தரும்.

**மனதை திறப்போம் மாயையை அழிப்போம்**





மனத் தெளிவு என்பதை அடையும்போது இறைவனைவிட மற்ற அனைத்தும் துச்சமாக தெரியும்.

இதை இன்னும் எளிமையாக சொல்லவேண்டு மானால், தெளிவான மனதிற்கு மாயையைஇனங் கண்டுகொள்ள இயலும். மாயையை இனங் கண்டுகொள்வதால், மாயைக்கு பின்னால் இருக் கும் இறைவன் பிரதட்சணமாக காட்சி தரு வான்.

இறைகாட்சி நம்மை ஆட்கொள்ளும்போது, சரீர வாழ்க்கையும், சரீர உறவுகளின் நிலையும் கண்துடைப்பு நாடகம் என்பதை உணர முடியும்.

இறைவன் நமக்குள்ளேதான் இருக்கிறான், நாமும் இறைவனும் ஒன்றே என்ற நிலையை அடையமுடியும். (அந்த நிலை அடையும்வரை நம் உடலையும் இறைவனையும் பிரித்தே பார்க்கத் தோன்றும்.)

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்







மனதை செம்மையாக்கி, இவன்தான்இறைவன் என்று ஆணித்தரமாக நம்பினார் கண்ணப்ப நாயனார். நமக்கு பசிப்பதைப் போன்று இறைவ னுக்கும் பசிக்குமே என்ற மனப் பக்குவத்தால்தான், தான் சாப்பிடும் அனைத்தையும் இறைவனும் சாப்பிடுவான் என்றெண்ணி, இறைவனுக்கு மாமிசத்தை படைத்தார்.

கண்ணப்பரின் மனப் பக்குவத்தை உணர்ந்த ஈசனும் அதை ஏற்றார்.

மனத்தூய்மை அடைந்தாலும், அகம் புறம் என்ற இரண்டு பதத்திற்கு வேறுபாடு உள்ளது என்பதை உணர்த்த, இறைவனின் அடுத்த நாடகம்தான் லிங்கத் திருமேனியின் கண்களில் இரத்தம் வடியவைத்து, புற பக்தியைவிட அகபக்தியே உயர்ந்தது என்பதை உலகிற்கு உணர்த்திய சிவலீலையாக பார்க்க வேண்டும்.

புற பக்தியில் சிறந்த சிவகோசரியாரும், கண்ணப்பர் வணங்கிய லிங்கத்திருமேனிக்கு அபிஷேகம் செய்து மாலை சார்த்தி வழிபட்டு வந்தாலும், கண்ணப்பர் படைக்கும் மாமிசங்கள் அவருக்கு அருவெருப்பை தரச்செய்ததால் ஈசனி டம் முறையிட்டார்.

அகபக்தி, புறபக்திக்கு தீர்ப்பு சொல்ல சிவ பெருமான் முன்வந்தார், இருவருக்கும் முன் லிங்கத் திருமேனியின் கண்களில் இரத்தம் வடியச் செய்தபோது, சிவகோசரி பதறினார், ஆனால் கண்ணப்பர் பதறாமல் வருத்தமடைந்து தன் கண்களைத் தோண்டி லிங்கத்திருமேனியின் கண்களில் பொருத்தினார்.

ஒருகண்ணைத் தோன்டிய வலியின் தீவிரத்தையும் பொருட்படுத்தாமல், லிங்கத்தின் மற்றொரு கண்களில் வடிந்த இரத்தப் போக்கை நிறுத்த, தன் இரண்டாவது கண்களைத் தோண்டி, சரியான இடத்தில் பொருத்த அடையாளக் குறி தேவை என்பதால் தன் கால் விரல்களை இறைவனின் கண்களில் நிலை நிறுத்தி அடுத்த கண்களைத் தோன்ட முற்பட்ட கண்ணப்பரின் அக பக்திக்கு கட்டுப்பட்ட சிவன் நேரில் காட்சி யளித்து கண்ணப்பரை ஆட்கொண்டார்.

மனச்செம்மையுடன் கூடிய அகபக்தியில் ஈடுபாடு வந்தால், தன் கால்விரல்களால் இறைவனைத் தீண்டினாலும், இறைவன் ஏற் பான் என்பதற்கு இன்னொரு உதாரணமாக கண்ணப்பர் தன் கால் விரல்களை தூக்கி இறை வனின் கண்களின் மீது வைத்ததை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இந்த இடத்தில் அக பக்தி வெற்றிபெற்றாலும், புற பக்தியில் சிறந்து விளங்கிய சிவகோசரியாரை யும் தன்னுள் ஆட்கொண்டார் சிவபெருமான்.

ஆனால் இன்றுவரை அகபக்தி கொண்ட கண்ணப்பரின் வரலாறே பல்வேறு கால கட்டத்தி லும் நிலையாக நின்று வருகிறது.

மனதை செம்மைப்படுத்த, மனதை தன் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர முற்படும் போது, இதுபோன்ற புராணங்களையும், இதிகாசங்களை யும் தேடித் தேடி படிக்கவேண்டும்.

ஏற்கெனவே இப்புராண இதிகாசங்களைக் கேள்விப்பட்டிருந்தாலும், நமது மனதிற்குள் பதியவைக்கவேண்டும், நம் மனதிற்கு வழிகாட்ட இப்புராணங்கள் தொடர்ந்து வழிகாட்டும்.

குதிரைக்கு நன்றாக கண் தெரிந்தாலும் அதன் பார்வை மற்றவற்றின் மீது சிதறிவிடக் கூடாது என்பதாலும், அதுசெல்லும் சாலை மட்டும் கண்ணுக்கு தெரியுமாறு அவற்றின் கண்களில் ஒருவித தோலால் செய்யப்பட்ட பட்டையை கட்டிவிடுவது போன்று.

நமது மனதை செம்மைப்படுத்த வேண்டு மானால், புராண இதிகாச கதைகள் ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், மீண்டும் மீண்டும் நமது மனதில் பதியும்படி மனதிற்கு படித்து காட்டி வந்தால் நமது மனம் செம்மையடைய பாதை கிடைக்கும்.

– பாதையை தேடி...
போன்: 9444228203

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்
www.aanmeegamalar.com

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப சந்தா

**UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**